
# ஆத்ம ஜோதி



ஸ்ரீ குரு மகானந்த
ஒளியுல்லா சுவாமிஜீ

# ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாதவெளியீடு ]


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

—சுத்தானந்தர்.


ஜோதி 16 || சுபகிருது வூல மாசிமீ 1௳ (13-2-63) || சுடர் 4


## பொருளடக்கம்


1 மகாகவி தாகூரின் கீதாஞ்சலி 121
2 ஸ்ரீ குரு மகானந்த ஒளியுல்லா சுவாமிஜீ 123
3 தீமை எது? 126
4 ஸ்ரீ சங்கர விலாசம் 129
5 ஆனந்தமாயி அம்மையிடம் அன்பர்கள் சம்பாஷணை 137
6 சங்கரர் பொன்மொழிகள் 144
7 வீடு சொர்க்கமான கதை 145
8 கேனோப நிஷத சாரம் 151



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ.3—00
தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

" ஆத்மஜோதி நிலையம் " நாவலப்பிட்டி. [சிலோன்]
தொலைபேசி எண்:- 353.


மகாகவி தாகூரின்

# கீதாஞ்சலி

## 38. உன்னுறவே!

உனையன்றி மற்றொன்றிவ் வுலகில்யான் வேண்டிடா
 உறுதியொன் றெனக் கருளுவாய்!
ஓயாதென் நெஞ்சினை யரித்திடும் ஆசைகள்
 ஒன்றிலும் பயன் ஒன்றிலை!
பனியிருட் கங்குலில், ஒளிவேண்டி நின்றிடும்
 பிரார்த்தனை அடங்கு மாப்போல்
பஞ்சையென் நெஞ்சகம் துஞ்சிடும் நிலையிலும்
 பரம,நினை யேவிழையுதே!
இனியநற் சாந்தியைச் சாடிடும் சண்டமா
 ருதமும்,அதி லே முடிவுறும்!
ஏழையேன், வாழ்வின் தொடக்கத்தில் உன்னருளை
 யே,எதிர்த்துக் கிளம்பினும்,
புனிதநின் உறவலால் பிறிதுவேண் டிலனெனப்
 புலம்பித் தவிக்கு தின்றேன்
புந்திதான்! இன்னுமென் புகலுவேன்? சர்வபரி
 பூரண சுகா னந்தமே!

## 39. பொழிக!

ஈரமில் லாதெனுளம் இறுகிக் கிடக்கையில்
இணையிலா அன்பு பொழிக!
என்வாழ்வி லேயெழில் மறைந்திடும் பொழுதுநீ
இன்னிசை யமுது பொழிக!
தீராத வேலைக் குழப்பத்தில் மூழ்கித்
தியங்கயான், திசையனைத்தும்
தீப்புயல்க ளால்எனைத் தாக்கிடும் வேளையில்
திவ்யசாந் தம் பொழிகநீ!
ஆராத வறுமையால் ஏழையோர் மூலையில்
அடங்கிக் கிடக்கை யில்,என்
அகத்தைத் திறந்தெனது மன்ன,நீ மாட்சியொடு
அருள்வளம் பொலிய வருக!
பேராசைப் பேய்பால் மயங்கிக் கிடக்கையில்
பேதையேன் கண் திறக்க,
பேரிடி முழக்குடன் சீரொளி பரப்பியருள்
பேரருட் குரு வேந்தனே!

## 40. பெய்யவில்லை!

காய்ந்திட்ட என்னுளக் கழனியிற் பலதினம்
கருணைமழை பெய்ய வில்லை!
ககனமிசை சிறுமுகிற் திரையுமில் லை,மழை
காட்டுநற் குறி தொலைவிலும்
வாய்ந்திடற் கிலை;நினது அந்தகக் கருமைசூழ்
வஞ்சினப் புயலை ஏவி,
மையிருட் சாமுழக் கத்துடன் மின்னலால்
வானெங்கி லும்கலக்கி,
தீய்ந்துருகி என்னகம் மாய்ந்திடச் செய்மவுனச்
செந்தழல் அவித்தி டாய்;இத்
தீக்கொழுந் தின்கொடுந் தாக்கம் பொறுக்கிலேன்,
செப்பருங் கொடிய தந்தோ!
பாய்ந்திடும் தந்தையின் கோபத்தின் முன்னுற்
பரிந்தெழும் தாய் முகம்போல்
பரம,நின் அருள்முகில் வறிஞனென் வாழ்வினிற்
பரிவொ டென்றும் கவிகவே!

— "பரமஹம்ஸ தாசன்"



# ஸ்ரீ குரு மகானந்த ஒளியுல்லா சுவாமிஜீ

(ஆசிரியர்)

சகோதரத்துவம், சமத்துவத்தைப் போதிக்கும் இஸ்லாம் மதத்தில் பல மகான்கள் தோன்றி உலகிற்கு ஞான ஒளியைப் பரப்பியுள்ளார்கள். மகானந்த சுவாமிகளும் இஸ்லாம் மதத்திற் பிறந்தவராயினும் சர்வ சமயத்தையும் சம்மதமாய்க் கொண்டவர்கள். இஸ்லாமியர்களின் நோன்பு மாசத்தில் சுவாமிகளின் சரித்திரத்தை வெளியிடுதல் மிகப் பொருத்தமானதே.

சுவாமிகள் இந்தியாவில் இராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்த கீழக்கரையில் அவதரித்தார்கள். இஸ்லாமிய குடும்பத்தவர்களாயினும் அக் குடும்பத்தினர் எல்லாச் சமயத் துறவிகளையும் தமது இல்லத்திற்கு அழைத்து உபசரிக்கும் பண்பினைப் பெற்றிருந்தனர். அக் குடும்பப் பண்பாடே சுவாமிகளை உலகத்திற்கு ஈந்தது என்றால் அது மிகையான தொன்றல்ல. சுவாமிகள் மாதாவின் கர்ப்பத்தில் அமைந்த காலத்தில் அக் குடும்பத்தினர்க்குப் பல அற்புதங்களை நிகழ்த்தியதோடு பல நன்மைகளையும் செய்துள்ளார்.

விளையும் பயிரை முளையிலே தெரியும்; வாழும் பிள்ளையை மண் விளையாட்டிலே தெரியும் என்றபடி சுவாமிகளின் பாலப்பருவ நிகழ்ச்சிகள் அவர் பிற்காலத்தில் ஒரு மகானாகத் திகழ்வார் என்றெடுத்துக் காட்டின. பலகாலம் அன்னாகாரமின்றிக் கடுந்தவஞ் செய்த கல்வத்து நாயகம் அவர்களைப் பற்றி அறியாதார் இல்லை என்றே கூறலாம். நாயகம் அவர்கள் தமது கடுந்தவத்தை முடித்து தமது சீடர்களுடன் ஆச்சிரமத்திலமர்ந்திருந்த காலத்தில் ஒருநாள் வீதிவழியே சென்றார்கள். அப்போ வீதியில் சிறார்களுடன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையாகிய ஸ்ரீ குரு மகானந்தாவைச் சந்தித்தார்கள். குழந்தையைச் சந்தித்த கல்வத்து நாயகம் அவர்கள் ஸ்ரீ குரு மகானந்த ஒளியுல்லா நாயகம் அவர்களைச் சுட்டிக் காட்டி

"இவர் ஒரு அவதார புருஷர், வருங்காலத்தில் இவர்

பெருங்காரியங்களைச் சாதிக்கப் போகின்றார்கள்'' என்று தமது சீடர்களிடம் திருவாய் மலர்ந்தருளினார்கள். அதன்பின் தமது சீடர் ஒருவர் மூலம் மகானந்தாவை அழைப்பித்தார்கள். அன்று வெள்ளிக்கிழமை. ஆண்டவனை ஆராதிக்கும் அவர்களுடைய உயர் கொத்துபா பள்ளிவாசலுக்கு அழைத்துச் சென்று பல பக்தர்களின் கூட்டத்து மத்தியிலே அவரை உச்சிமோந்து உபதேசம் செய்து குருஸ்தானத்தில் வைத்தார்கள்.

மகானந்த ஒளியுல்லா நாயகமவர்கட்கு உரிய பருவம் வந்ததும்திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று பெற்றார் பெரிதும் முயன்றனர். நாயகம் அவர்கள் தமது வெறுப்பை உணர்த்தினார்கள். பெற்றார் நாயகம் அவர்களின் உயர்ந்த நிலையை உணரவில்லை. பெற்றாரின் வற்புறுத்தலைச் சகிக்க முடியாது ஒருநாள் பிறந்த ஊரை விட்டு வெளியூர் சென்றார்கள். திருப்பத்தூர் என்னும் நகரைச் சேர்ந்து அங்கோர் மரத்திலேறி அம் மரத்தில் இரவு பகலாக அன்னாகாரமின்றி இருந்து வந்தார்கள். ஒருநாள் திடீரெனப் பூமியில் விழுந்தார்கள். விழுந்ததன்மேல் அவர்களிடமிருந்து அவர்களையும் அறியாமலே பல சித்துக்கள் வெளியாயின. அதன்மேல் திருப்பத்தூரில் ஓர் பெருங் கட்டிடத்தில் அவ்வூரார் அமர்த்தி வைத்து ஆக வேண்டிய சிசுருட்சைகள் யாவும் செய்து வந்தார்கள். அநேக உத்தமர்கள்'நான்முந்திநீமுந்தி'என்றுபோட்டிபோட்டுக்கொண்டு சீடர்களானார்கள். பல வருடங்களாக அன்னாகாரமின்றிப் பால் மாத்திரம் பருகி வாழ்ந்தார்கள்.

ஸ்ரீ குரு மகானந்த ஒளியுல்லா சுவாமிஜீ அவர்களின் பிரகாசம் இந்தியாவில் மாத்திரமன்றி மேலைநாடுகளிலும் பரவத் தொடங்கியது. ஒவ்வொருநாளும் பல ஊர்களிலிருந்தும் பல மதத்தர்களும் சுவாமிகளைத் தரிசிக்கக் கும்பல்கும்பலாக வந்து சேர்ந்தார்கள். அங்கு வருபவர்களுக்கு அன்னாகாரம் அளிக்கப்படும். அரிசி மூடைகளும் காய்கறி சாமான்களும் வண்டிவண்டியாக வந்து சேரும். தீராத நோயாளர், நெடுநாள் பேய் பிடித்தோர் சுவாமிகள் முன்னிலையில் சுகம் பெற்றனர். சுவாமிகள் திரிகால முணர்ந்த ஞானியாக விளங்கினார்கள். பின்பு நடக்கப் போவதை முன்னதாகவே தெரிவித்து விடுவார்கள். ஒவ்வொருவரின் உள்ளத்தையும் ஊடுருவிப் பார்ப்பார்கள். அவரவரின் பக்குவத்தையும் தெள்ளத் தெளிவாகக் காண்பார்கள்.



அவரவர் பக்குவத்திற்கேற்ப உபதேசித்து அனுப்புவார்கள்.

ஒருநாள் மதுரையிலிருந்து தரிசிக்கப் பிரபலஸ்தர் ஒருவர் வந்தார், சுவாமிகளிடம் விண்ணப்பம் ஒன்றை விடுத்தார். மதுரையில் வசதியான ஆச்சிரமம் ஒன்று அமைக்கின்றேன். சுவாமிகள் அங்கு எழுந்தருளி யிருந்து மதுரை மக்களை மகிழ்விக்க வேண்டும்' என்று பணிந்து நின்றார்கள். சுவாமிகள் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ஆச்சிரமம் அமைக்கப் பட்டது. சுவாமிகள் ஆச்சிரமத்திற்கு எழுந்தருளினார்கள். மதுரையிலுள்ள பக்தர்கள் தமிழ் வித்துவான்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பொதுமக்கள்யாவரும் சுவாமிகளைத்தரிசித்து உய்வடைந்தார்கள். அங்குவேதாந்த உபந்நியாசங்கள்நடந்தன. சுவாமிகளுடைய பிறந்த நாட் கொண்டாட்டத்தைப் பல ஊர்களிலுமுள்ள அவரது சீடர்கள் ஒன்று சேர்ந்து உயர்ந்த முறையில் கொண்டாடினர். வாரம் தோறும் கூட்டு வழிபாடும் நடைபெற்று வந்தது.

சுவாமியவர்களின் பிரதம சீடர் கலெக்ரர் நகுதா என்பவரின் புதல்வன் லண்டனில் உயர் வகுப்புப் படித்து வருங்காலத்தில் தனது சிநேகிதர்களுக்கு ஒருநாள் தேநீர் விருந்து வைத்தார். விருந்தின்போது சுவாமிகளின் பெருமைகளைப் பற்றி உரைத்துக் கொண்டிருந்தார்கள். சுவாமிகள் அந்த நேரமே அவர்கள் முன்தோன்றித் தேநீர் அருந்தி உடனே மறைந்து விட்டார்கள். இவ்விடயத்தைப் பற்றி மகன் தந்தைக்குத் தந்தி மூலம் அறிவித்தார். உடனே நகுதா சுவாமிகளிடம் சென்று தந்திச் செய்தி பற்றித் தெரிவித்தார்.

இதுபெரும் ஆச்சரியம் அல்லவே! எங்கும் நிறைந்த பரம்பொருள் எல்லாரிதயத்திலும் இருப்பது உண்மைதானே! பக்தர்களின் இச்சையை நிறைவேற்றி வைப்பது பரமனின் கடமையல்லவா? சுவாமியவர்கள் தமது அநுபவ நிலையை அத்வைத கானம், மகானந்த கீதமென்ற நூல்கள் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றைச் சுவாமிகளின் பிரமானந்தநிலையென்றே கூறலாம். சுவாமியவர்கள் 1960ம் ஆண்டு பூத உடலைப் பிரிந்து என்றும் அழிவில்லாப் பேரின்ப நிலையை எய்தினார்கள்.

# தீமை எது?

(கன்னையா யோகி அவர்கள்)

கடவுளை நம்பி, பக்தி பூசனைகளால் வழிபடும் பலரும் தம் மனதில் சில சமயங்களில் ''கடவுள் உலகில் துன்பத்தை, தீமையை ஏன் படைத்தார்'' என ஐயுறுகிறார்கள். இதற்கு விடை கூற முற்பட்ட சில மதப் பிரசாரகர்கள் ''உலகில் துன்பத்தையும் தீமையையும் படைத்தது கடவுளல்ல, அவரைப்போல் தன் காரியத்தில் சமசக்தி கொண்ட, கிறிஸ்துவர்களால் சைத்தான் எனக் குறிக்கப் படும் தனியொரு ஆதிப்பொருளே அவைகளைப் படைத்தது என விளக்கம் கொடுத்தார்கள். "கடவுளின் சிருஷ்டியும், சைத்தானின் சிருஷ்டியும் ஒரே சமயம் ஆவதால் நன்மையுடன் தீமை கலந்திருக்கிறது'' என்பது அவர்களின் வாதம். ஹிந்துக்கள் ''கடவுளையும் மயக்க வல்ல திறமை கொண்ட மாயையே உலகில் தீமையை உண்டாக்குகிறது'' என்பர்.

''கிறிஸ்தவ விஞ்ஞானிகள்'' எனும் ஒரு மனோதத்துவ சாஸ்திரக் கூட்டத்தினர் ''உலகில் துன்பமே இல்லை'' என்கிறார்கள். அவர்கள் ''கடவுள் அன்புருவானவர், உலகம் அவர் படைப்பு, அன்பின் வடிவான ஆண்டவன் படைப்பில் தீமை எப்படி இருக்க முடியும்? என வாதாடுகிறார்கள்.

வேதாந்திகளில் ஒரு பிரிவினர் "மனமே துன்பத்துக்கு ஆதாரம், அஞ்ஞானத்தால் கவரப்பட்ட மனம் ஒன்றைத் தீமையமாகவும், ஒன்றை நன்மையாகவும் காட்டுகிறது, அஞ்ஞானத்தைஅழித்தவர்களுக்கு உலகில் துன்பமே காணப்படாது'' என்கின்றனர்.

இவ்வுலகில் பஞ்சத்தாலும், பிணிகளாலும், பூகம்பங்களாலும், வெள்ளங்களாலும், பகைமைகளாலும் பீடிக்கப்பட்டு வருந்தும் மக்களை நாம் காணவில்லையா? நம் கண் முன்னால் நடைபெறும் இவைகளை இல்லையென நாம் எப்படிக் கூற முடியும்? இது வெறும் கற்பனை தானா? வேதாந்திகளைத் தவிர மற்றவர்கள் இதைக் கற்பனை என ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். வேதாந்திகள், தாம்



சொல்வதைப் போல் உலகம் வெறும் கற்பனை என்பதை நம்புவார்களானால், இக் கற்பனை உலகில் வாழ்வதற்காக அவர்கள் பெரு முயற்சி ஏன் செய்ய வேண்டும்? உணவும் உறவும் அவர்களுக் கெதற்கு?

உலகில் காணும் துன்பத்துக்கு என்ன ஆதாரம்? ஆண்டவன் படைப்பில் துன்பம் ஏனிருக்க வேண்டும்? இதற்குச் சரியான விடையை சிருஷ்டியின் இரகசியத்தை நேர்முகமாய் அறிந்து வரும் குரு பரம்பரையைச் சேர்ந்த ஒருவரிடம் கேட்டுத்தான் நாம் ஐயந்திரிபற அறிய முடியும். ஆகவே, இதற்கு விடையாக ஒரு யோகியர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்போம்.

சிருஷ்டி யென்பதென்ன? ஒன்று இரண்டாகி, இரண்டு மூன்றாகி, மூன்று அளவற்ற வடிவங்களாவதே சிருஷ்டி! பலவாக மூலமான ஒன்று, இரண்டான பின், இரண்டும் ஓரளவாகக் கலக்க வேண்டும். அவ்வொன்று நாம ரூப அதீதமானது — சக்தியோ, ஜடமோ அல்லாதது. இது சக்தி, ஜடம் ஆக தன்னை இரண்டாகக் கூறுபடுத்துகிறது. மற்றனைத்தும் சக்தி, ஜடங்களில் பல அளவான கலப்பு வடிவங்களே. ஆன்மா என்பது அவ்வொன்றிலிருந்து வெளிப்படும் சிறுபொறி, ஜடக்கவசத்துள் தன்னை இருத்திக் கொண்டு ஆன்மா பரிணாமமடைகிறது; ஆன்மா தன் கவசத்தின் ஜடப் பகுதியில் இயங்கும் போது அதன் அனுபவம் இன்பம் எனப்படுகிறது. உண்மையில் உலகில் இன்பமோ, துன்பமோ இல்லை. ஆன்மாவின் அனுபவ வேற்றுமையே இன்ப துன்பத்துக்கு அடிப்படை.

மேற்கண்ட யோகியரின் கூற்றை சற்று விரிவாக விளக்குவோம் — உலகில் இரவு பகல்கள் இருக்கின்றன, எதற்கு? பகலில் நன்றாய் உழைக்கும் நாம் மாலையில் களைத்து விடுகிறோம், இதற்காக நமக்கு ஓய்வும், இழந்த சக்தியைப் பெறும் வாய்ப்பும் தேவைப்படுகிறது; இதற்காக இரவில் தூங்குகிறோம்; இரவிலும் சூரியவொளி இருந்து கொண்டிருந்தால், நாம் களைத்துப் போன தசைகளை நன்றாகத் தளர்த்தி விட்டு சக்தி பெற முடியாது; ஏனெனில் சூரியவொளியும், வெப்பமும் நம் உடலணுக்களை ஓயாமல் தூண்டிக் கொண்டே இருக்கும், இதற்காகவே இரவு படைக்கப்பட்டது. ஓர் சிறு செடியும் தன் இழந்த சக்தியைப் பெற இரவை நாடி நிற்கிறது. சூரிய வெப்பத்திலேயே வளரும் செடி பட்டுப் போகும்.

தன் பகல் நேர உழைப்பால் பெறும் சம்பாத்தியம் போதப் பெறாத ஒருவன் இரவில் உழைத்துச சம்பாதிக்க விரும்பலாம். இவனுக்கு இரவு தீமையானது, வீணாகப் படைக்கப் பட்டதாய்த் தோன்றும். இவன் ''கடவுள் இரவைப் படைத்து, மக்களுக்குத் தீமை பயந்து விட்டார்'' எனக் குறை கூறலாம்.

ஆன்மா, சிருஷ்டி நிலையனைத்திலும் நல்லநுபவம் பெறுவதன் மூலம் தன் ஞானத்தை வளர்த்துக் கொண்டு தன் தந்தையுடன் சமநிலை பெறுவதற்காக சிருஷ்டியில் சக்தியும், ஜடமும் படைக்கப் பட்டது ஆனால் ஆன்மா சிருஷ்டியின் அநுபவத்தைப் பெறுவதற்குப் பதிலாக, ஜடத்தில் மூழ்கி தன குறிக்கோளை மறந்து இல்லாததில் இன்பத்தைப் பெற முயற்சிக்கிறது.

இன்பமற்ற ஜடத்தில் இன்பம் பெற முயற்சிப்பதனால் துன்ப அனுபவத்தை ஆன்மா துன்ப அனுபவத்தை ஆன்மா பெறுகிறது. எந்த நொடியில் ஆன்மா தன் குறிக்கோளை ஞாபகப் படுத்திக் கொண்டு, சிருஷ்டியில் மூழ்கி விடாமல், அதன் விளையாட்டைக் காண்பதுடன் தன்னை நிறுத்திக் கொள்ளத் தொடங்குகிறதோ, அந் நொடியிலிருந்து அது இன்ப துன்ப அனுபவங்களைக் கடந்து விடுகிறது. இயற்கை விளையாட்டின் தன்மை ஞானத்தை மட்டும் அது அப்போது பெறுகிறது.

இவ்வுலகம் தன் பரிணமத்தை மேற்கொண்டாக வேண்டும், இதற்காக உலகில் பல மாறுதல்கள் நடைபெறுகின்றன. இதைத் தனக்குச் சம்பந்தமில்லாததாகக் கருதி வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பவனுக்கு இவைகளால் துன்ப மேதும் உண்டாகாது. ஆனால் உலகில் அனுபவம் தேட முயற்சித்தானானால் எண்ணற்ற துன்ப அனுபவங்களைப் பெற்றேயாக வேண்டும்.

உலகின் ஜடத் தன்மையைத் தொடர்வது துன்பம், சக்தித் தன்மையைத் தொடர்வது இன்பம். தினமும் இரவுக் காட்சிகளைக் காண விருப்புபவனுக்கு இரவு துன்பம், ஓய்வு தேவைப்படுபவனுக்கு இரவு மிகவும் இன்பம். இவ்வுலகை விட்டுப் போக விரும்பாதவனுக்கு மரணம் கொடிய துன்பம், தன் ஜட பரிணமத்தை முடித்து விட்டு, முக்திக்காகக் காத்திருப்பவனுக்கு மரணம் கடவுள் வரப்பிரசாதம்.

இவ்வுலகில் எப்படி, எதற்காக வாழ வேண்டுமென்று அறிந்து அதன்படி வாழ்பவனுக்கு இவ்வுலகம் இன்பமயம், வாழ்க்கை இரகசியத்தை அறிந்து கொள்ளாதனுக்கு உலகம் துன்பமயமே.



# ஸ்ரீ சங்கர விலாஸம்

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

ச்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்|
நமாமி பகவத்பாத ஸங்கரம் லோகஸங்கரம்||

ஸர்வம் ஹி ஏதத் ப்ரஹ்ம; அயமாத்மா; ஏஷ ஸர்வேச்வர ஏஷ ஸர்வஜ்ஞ: ஏஷ: அந்தர்யாமீ ஏஷ ஸர்வஸ்ய யோநி: பூதானாம் ப்ரபவாப்யயௌ.

எல்லாம் பிரம்மம்; இதுவே ஆத்மா;
இதுவே இறைவன்; எல்லாம் அறிந்தது
அந்தர்யாமீ ஆக்கமும் அழிவும்
அனைத்தின் மூலம் அதுவே யானே.

இது மாண்டுக்ய உபநிஷத் வாக்யம்; பிரம்ம லக்ஷணம்; பன்னிரண்டே பாசுரங்களைக் கொண்ட யாண்டுக்யத்திற்கு கௌடபாதர் 'தத்வமஸி — அயமாத்மா ப்ரம்ம' — என்ற உண்மைகளை அடிப்படையாக வைத்து வியாக்யானம் செய்தார். அந்த உண்மைகளைப் பரம பிரம்ம நிஷ்டரான கோவிந்த பகவத்பாதர் இருந்து காட்டினார். 'இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிய' கோவிந்த பகவத்பாதர் நர்மதை நதிக்கரையில் ஓங்காரக் குஹையில் தானே தானாயிருந்தார்.

ப்ரஹ்மைவாஹம் ஸம: சாந்த: ஸச்சிதானந்தலக்ஷண;
நாஹம் தேஹோ ஹ்யஸத் ரூபோ ஞானமித்யுச்யதே புதை:

சாந்தன் சமத்துவன் சச்சிதானந்தன்
அசத்துடல் அல்லேன் யானே பிரம்மம்

என்று தன்னுள் நிலைத்த பரமயோகியை யார் அறிய முடியும்? யாராவது வந்து குஹைக் கதவைத் தட்டிக்கேள்விகேட்டால், உபதேசம் கேட்டால்'நாஹம்,கோஹம்,ஸோஹம்' என்பார். நானார், நீயார், உடலார், உயிரார், அல்லதை விட்டு உள்ளதை எண்ணு என்பார். நமது காலத்திலேகூடப் பகவான் ரமண மஹரிஷிகள் 'நானார்' என்ற கேள்வியே உருவாக மலைமுன் மலைபோல விளங்கினார். எத்தனை பேர் 'நானார்' என்ற கேள்விக்கு உள்ளே பதிலை அறிந்தார்களோ தெரியவில்லை. பயாஃஜித் (Bayazid) என்ற ஸூஃபி மஹாத்மா, 'நான் கடவுளைத் தேடிச் சென்றேன். அவர் எனக்குள் இருந்து, 'நான்' என்று ஒலித்தார்' என்றார். ஒரு நண்பர் கதவைத் தட்டி 'உள்ளே யார்'

என்று கேட்டார். 'நானான ஒன்றைத் தவிர யார் இருக்க முடியும்; 'அந்த நானே இது, அது உது' என்றார் மஹான்,

அதைப்போல் கோவிந்த பகவத்பாதர் இருந்த குஹையின் கதவை ஒரு பையன் ஒருநாள் தட்டினான். 'யார் நீ' என்ற ஒலி எழுந்தது.

> ந பூமிர் ந தோயம் ந தேஜோ ந வாயு:
> ந கம் நேந்த்ரியம் வா ந தேஷாம் ஸமூ:க।
> அநேகாந்திகத்வாத் ஸுஷுப்த்யேகஸித்த:
> ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம்॥

> நான் யாரா? நான் பூமியில்லை
> நீரில்லை, தீயில்லை, காற்றில்லை, மலையில்லை,
> புலனில்லை, வேறில்லை - பூரணசிவமே
> சிவன் சிவமே - சிவன் சிவமே.

> பிறப்பிலேன் இறப்பிலேன் பெற்றாரில்லேன்
> ஆசான் இல்லேன் சீடனும் இல்லேன்

என்ற பதில் வந்தது. இதைக் கேட்டதும் கோவிந்த பகவத்பாதர் கதவைத் திறந்து பார்த்தார் 'வாடா ஞானக் கண்மணியே உனக்கே காத்திருந்தேன்' என்று அன்புடன் வரவேற்றார். வேதத்தின் சிரோமணியான வேதாந்தத்தைப் புகட்டினார்.

> ப்ரஹ்ம ஸத்யம் ஜகன் மித்யா ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:

> உள்ளது ப்ரம்மம்; உலகம் இல்லை;
> ப்ரம்மம் அன்றிச் சீவன் வேறில்லை

இந்த உண்மையை உலகிற்குத் தா என்றார். பதினாறு வயதுள்ள அந்த வாலிபனே உலகின் ஞான சக்கரவர்த்தியாகவும் பரம ஸத்குருவாகவும் விளங்கும் ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத் பாதாசாரியார் ஆவார்.

ஐரோப்பாவில் ஸாக்ரெடிஸ், பிளேட்டோ, காண்டு, தெகார்த்து; ஸபினோசா, ஷோபென்ஹௌர் போன்ற சிறந்த சிந்தனையாளர்கள் செய்த ஆராய்ச்சியெல்லாம் சங்கராசாரியாரின் விவேக சூடாமணியில் அடக்கம். சைனா தேசத்து ஞானியான லௌத்சுவின் அனுபவ வாக்குகளெல்லாம் சங்கரரின் நாலு வரியில் அடக்கம். ஸதாசிவப்ரம்மேந்திரர் முதல் பகவான் ரமண மஹரிஷிகள் வரையில் விளங்கிய பரம ஞான சித்தரின் அனுபவங்களெல்லாம் தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தின் ஒரு சுலோகத்தில் அடக்கம்.



> நானாச்சித்ர கடோதர ஸ்தித மஹாதீப ப்ரபா பாஸ்வரம்
> ஞானம் யஸ்ய து சக்ஷுராதி கரண த்வாரா பஹி: ஸ்பந்ததே

> ஜானாமீதி தமேவ பாந்தமனுபாத்யேதத் ஸமஸ்தம் ஜகத்
> தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே

ஒரு குடம்; அதில் பத்துத் துவாரங்கள்; உள்ளே விளக்கு: துவாரங்கள் வழியாக வெளியே விளக்கொளி வீசுகிறது; அதுபோல் ஆத்மாவின் அறிவொளி நமது பொறி புலன் மன ஆதிகள் வழியாக வீசுகிறது. அதனால் நாம் உலகை அறிகிறோம். ஒரு படக்காக்ஷியைக் காண்போம்; உள்ளே விளக்கு; அதன் ஒளி வெள்ளித்திரையில் வீசுகிறது. அந்த வெள்ளி வெளிச்சத்தில் படம் எத்தனையோ மாயா ஜாலங்களாக விளையாடுகிறது. உள் விளக்கு அணைந்தால் ஆட்டம் பாட்டம் எல்லாம் இல்லாதுபோம். அதன் ஒளியாலே இது எல்லாம் ஒளிரும். 'தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி' இந்த உண்மையைப் பகவான் சங்கரர் கீதை, உபநிஷத், பிரம்மஸூத்ரம் ஆகிய மூன்று நூல்களின் விரிவுரையில் விளக்கினார். விவேக சூடாமணி, அபரோக்ஷாநுபூதி, தசசுலோகீ, நிர்வாணஷ்டகம், பஜகோவிந்தம் ப்ரச்னோத்தர ரத்னமாலிகா சிவானந்த லஹரீ ஸௌந்தர்ய லஹரீ இன்னும் எத்தனையோ மஹாக்ரந்தங்களை பகவான் சங்கரர் அருளினார். அவை இன்றும் வழங்குகின்றன: என்றும் எக்காலும் ஒளிதந்து நிலவும். ''கல்லாலின் கீழ் நால்வருக்குச் சின்முத்திரையால் மௌனோபதேசம் செய்த பரமகுருவே இப்போது சங்கராசாரியராகப் பேசி உலாவுகிறார்' என்றார் வித்யாரண்யர்.

> முக்த்வா மௌனம் வடவிடபினோ மூலதோ நிஸ்ஸரந்தீதி
> சம்போர் மூர்த்திச்சரதி புவனே சங்கராசார்யரூபா

வேத தர்மத்திற்படிந்த மாசுக்களை எல்லாம் ஊதி எறிந்து எதிர்ப்புப் புயல்களை அஞ்சாது வீழ்த்தி, சங்கார் திக்விஜயம் செய்து காசியிலும் வேதாந்த ஜயக்கொடியை நாட்டி கேதாரநாத்தில் மறைந்தார். பூர்ணா நதிக்கரையில் அவதரித்து ஸம்ஸார முதலையின் பிடிப்பிலிருந்து விடுதலைபெற்று. கோவிந்த பகவத்பாதர் குஹையில் அறிவு பெற்று, கால விநோதங்களைக் கண்டு, உலகிற்கு உள்ளுண்மையை விளக்கி, தனது அவதார காரியம் முடிந்ததும், கைலாசத்தை நோக்கிச் சென்று, கேதாரத்தில் பரிபூர்ண ஸமாதியடைந்தார் பகவான் சங்கரர். சிருங்ககிரி முதல் ஜோதிர் மடம் வரையில் மடங்களை நாட்டினார் சங்கரர். இவர் உலகில் உதித்த எல்லா மதங்களுக்கும் தத்துவங்களுக்கும் தக்க வழிகாட்டியிருக்கிறார். இப்போது உலக மதங்களையெல்லாம் அரு, உரு, குரு - மதங்கள் என்று பிரிக்கலாம். பௌத்த சமணாதிகள் குருவை வணங்குவன. சைவ, வைணவ, சாக்த

ஸௌர, காணபத்ய, கௌமார மதங்கள் உருத்தொழுகை செய்வன கிறிஸ்துவம், இஸ்லாமியம், யூதமாதி மதங்கள் கடவுளை அருவாக வணங்குவன. நமது வைதிக மதத்திலேயே ஒன்று, இரண்டு, மூன்று என்று பல வேறுபாடு உண்டு, த்வைதம் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சுத்தாத்வைதம், கேவலாத்வைதம், பேதாபேதம், புஷ்டு மார்க்கம், ப்ரேம மார்க்கம் - இன்னும் எத்தனையோ உண்டு. அத்தனைக்கும் ஸோபான முறையாக வழிகாட்டுவது சங்கரசித்தாந்தம் கீதை, கர்மண்யேவ அதிகாரஸ்தே; ந மே பக்த: ப்ரணச்யதி; ஞானி து ஆத்மைவ மே மதம்; தஸ்மாத் யோகீ பவார்ஜுன' என்றெல்லாம் சொல்லி 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்று சரணாகதி காட்டி முடிவில் வேதாந்த சித்தியை எட்டுகிறது.

நிர்மான மோஹா ஜித சங்க தோஷா
அத்யாத்ம நித்யா விநிவ்ருத காமா:
த்வந்த்வைர் விமுக்தா: ஸுகது:க ஸம்ஜ்ஞை:
கச்சந்த்யமூடா: பதமவ்யயம் தத்.

மனமோகம், சோகம் ஸங்கல்ப ஸம்ஸ்கார தோஷங்களை வென்று நிராசை அடைந்து, நிஷ்காம நிர்விகல்ப சமாதியில் குணபந்த த்வந்த்வமற்ற நித்தியசுத்தனாக சுக துக்கம் அற்ற சமத்துவனாக தத்வமஸி. அது நீ என்ற உன்னத வேதாந்த நிலையடைய வழிகாட்டுகிறது. ஆசாரிய சங்கரர் கர்மம், பக்தி, ஞானம், இம்மூன்றிற்கும் படிப்படியாக நம்மை அழைத்துச் செல்லுகிறார்.

யத்யத் கர்ம கரோமி தத்ததகிலம் சம்போ தவாராதனம்

'செய்வதெல்லாம் சிவபூஜை' என்று பக்திக் கனல் மூட்டுகிறார் கீதையும் 'எதைச் செய்தாலும் எனக்கே அர்ப்பணமாகச் செய். முடிவில் எல்லாம் விட்டு என்னைச் சரண்புகு' என்கிறது. 'முக்திக்கு வித்து பக்தி' என்று சங்கரர் தொடங்கி

ஸ்வஸ்ரூபானு ஸந்தானம் பக்திரித்யபிதியதே

'தன்னை நினைத்துத் தானாயிருப்பதே பக்தி' என்கிறார். பதஞ்ஜலி யோகி ஈச்வரப்ரணிதானத்தை உபதேசித்து

தத்ர நிரதிசயம் ஸார்வஜ்ஞ்யபீஜம் தஸ்யவாசக: ப்ரணவ
தஜ்ஜபஸ்ததர்த்தபாவனம் த்யான ஹேயாஸ்தத்வ்ருத்தய:

என்று படிப்படியாகத் தியான சமாதியை ஊக்குகிறார். பிரம்ம ஸூத்ரமும் கதிஸாமாந்யாத், ஆனந்தமய: அப்யாஸாத் என்று ஆத்மானந்தத்தை ஊக்கும். இவையெல்லாம் பகவான் ரமண மஹரிஷிகளின் அனுபவ வாக்கில் முடிகின்றன.



ஹ்ருத்ஸ்தலே மன: ஸ்வஸ்ததா க்ரியா
பக்தியோகபோதாச்ச நிச்சிதம்

இதய குகையின் நடுவில் மனம் லயமடைந்தே
இருந்தபடியிருந்து மகிழேனோ -
உதய நிலையறிந்து கவலையற ஒடுங்கி
ஒருமையுற உணரப் பெறுவேனோ
அதனின் உயரவரு துரியமலை முடியில்
அம்ருத சஞ்ஜீவிரசம் - பருகேனோ
சுருதியும் இசையும் என மவுன வெளிகலந்து
சுகமருளும் இனிய பரமாத்மா.

இதுதான் பரமயோக வேதாந்த சித்தி.

மனிதன் வேண்டுவது இன்பம். அதுவே அவன்; ஆத்மா ஸச்சிதானந்தம். அதையே வேண்டி மனிதன் முயல்கிறான். ஆனந்தத்தில் பல படிகள் உண்டு. நல்ல உறுதி, செல்வம், பலம் பேர் புகழுடன் நூறாண்டு வாழ்வது மனுஷ ஆனந்தம். அதைவிட நூறு மடங்கு மனுஷ்ய கந்தர்வ ஆனந்தம். இவ்வாறே தேவகந்தர்வர், பித்ருக்கள், ஆஜானதேவர், கர்மதேவர், தேவர், இந்திரன், பிருஹஸ்பதி, பிரஜாபதி, பிரஹ்மா இவர்களின் ஆனந்தம் நூறு நூறு மடங்கு அதிகம் என்று ஆனந்தவல்லி கூறுகிறது. சுத்த ப்ரஹ்மானந்தத்திற்கு அளவே கிடையாது. இதையே வித்யாரண்யர் விஷயானந்தம், யோகானந்தம், ஆத்மானந்தம். அத்வைதானந்தம், வித்யானந்தம் என்று அடுக்கிச் சொல்கிறார். இந்த சுத்தப் பிரம்மானந்தம் பெறும் மட்டும் மனிதனுக்கு நிம்மதி இராது. ஒரு மீனைப் பிடித்து 'மீனே, நீ என்னுடன் லட்டு லாடு சாப்பிடு, மெத்தையில் உறங்கு' என்றால் இருக்குமா? தண்ணீரில் விட்டால்தான் அது ஆனந்தமாக நீந்தி விளையாடும். காட்டில் சுதந்திரமாகப் பறந்து உலாவும் கிளியைத் தங்கக் கூட்டில் அடைத்து, மாம்பழம் தந்தாலும் இன்புறுமா? பந்தவீடல்ல; சுதந்திரக் காடே அதன் இயலிடம். தன் சுயநிலையும் சுதர்மமுமான சுத்த சச்சிதானந்தத்தை மறந்து கானல்நீர் போன்ற உலக சுகத்தில் மயங்குதல் உள்ளங்கையில் வார்த்த அமுதத்தை எறிந்து விட்டுப் புறங்கையை நக்குவது போலத்தான் இருக்கும். உலகில் உண்டான தத்துவ சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் பார்த்தால் புக்தி - முக்தி என்ற இரண்டு முனைகள் காணும். கேவலம் புக்தியை, உலக இன்பத்தை, புலன் மகிழ்வை வேண்டினோர் உலகாயதர் (எபிகூரியன்கள்). கேவலம் முக்தியை மட்டும் வேண்டினோர் பரமஞானிகளான கேவலாத்வைதிகள்; புக்திக்கும் முக்திக்கும் நடுவே தார்க்கிகன் யுக்தியை நிலைநாட்டுகிறான். புத்தியை ஊன்றுகிறான்; மத்வராமானுஜ சைதன்யாதிகள் பக்தியை

நாட்டினர்; அரவிந்தாதி தாந்திரிக யோகிகள் சக்தியை நாட்டினர். துறவிகள் விரக்தியை நாட்டினர்; ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியார் புக்தி, யுக்தி, பக்தி, சக்தி, விரக்தி - அனைத்தையும் காட்டிக் கேவலாத்வைத சித்திக்கும் முக்திக்கும் வழிகாட்டினார். எல்லாம் வேத வழிதான். குமாரிலபட்டரை மாடியிலிருந்து புத்தமதம் உருட்டித் தள்ளியது. 'வேதமே உண்மையானால் நான் பிழைப்பேன்' என்று கீழே விழுந்தார் குமாரிலர். பிழைத்தார்; புத்த மதத்தினரைக் கண்டித்தார்; ஒழித்தார்; பிறகு அக்னிப் பிரவேசம் பண்ணினார்: அவரே சங்கரரை கர்ம ஸாதகரான மண்டன மிச்ரரிடம் அனுப்பியது! குமாரிலபட்டரின் தங்கை சாரதாதேவியே மண்டனர் மனைவி. கர்மகாண்டப் புலியான மண்டனர் ஞான சிம்மமான சங்கரருடன் வாதாடினார். சங்கரர் வென்றார். மண்டனர் பணிந்தார். அவர் சுரேச்வராசாரியாராகி சாரதா பீடத்தைக் காத்தார். சங்கரர் இரண்டு வரிகளில் மண்டனரை ஞானியாக்கினார்.

தேஹபுத்யா து தாஸோஹம் ஜீவபுத்யா த்வதம்சக:
ஆத்மபுத்யா த்வமேவாஹம் இதி மே நிச்சிதம் மன:

உடலபிமானம் உள்ளமட்டும் நான் அடிமை: கர்ம மார்க்கமே என் தலைவனைக்கூட ஏற்றது. நான் ஜீவன், அம்சன் என்னும்போது பக்தி யோகம் தலைக்கூடி தெய்வப் பங்காகிறான் மனிதன். ஆத்ம புத்தியடைந்ததும், நான் நீ த்வமேவாஹம் என்ற வேதாந்த உண்மை புலப்படும். அப்போது மனக்கட்டுமானங்களான ஜாதிகுல கோத்திரங்கள் விலகிப்போம்.

ப்ரஹ்ம தத்வமஸி பாவயாத்மனி

நீ பிரம்மம்; நீ அது தத்வமஸி - இதை நினை என்பதுதான் விவேக சூடாமணி (சு. 255) சங்கரர் கண்ட ஞானமணி — யோக ஸ்தானங்களுக்குக்கூட ஞானப்பொருள் அளித்தார் சங்கரர்.

நிஷேதனம் ப்ரபஞ்சஸ்ய ரேசாக்ய: ஸமீரண;
ப்ரஹ்மைவாஸ்மீதி யா வ்ருத்தி: பூரகோ வாயுரீரித:

ததஸ்த் த்வ்ருத்திநைச்சல்யம் கும்பக: ப்ராணஸம்யம:
அயம் சாபி ப்ரபுத்தாநாம் அக்ஞாநாம் ப்ராணபீடனம்

விஷய வைராக்யம் வேண்டும். சமாதி ஷட்கஸம்பத்தி பெறவேண்டும்.

(1) சமம் - நினைவடக்கம், (2) தமம் - புறம்போகாமை, உபரதி- விஷயாதிகளை விடுதல், (4) திதிக்ஷை - துயர் பொறுத்தல், (5) சிரத்தை - வேதாசிரியன் வாக்கில் கருத்தூன்றல், (5) ஸமாதானம் - உள்ளொருமை, முமுக்ஷுத்வம் - முக்தியார்வம், விடுதலை வேட்கை உறுதி, இஹாமுத்ர பலபோக விராகம் - இங்கும் அங்கும் சிறு இன்பத்திற்கு அலையாமல் தன் நிலையில் இருத்தல்.



இவ்வாறு ஆத்மவிசாரம் செய்தல் வேண்டும்.

கோஹம் கதம் இதம் ஜாதம் கோ வா கர்தா அஸ்ய வித்யதே
உபாதானம் கிமஸ்தீஹ விசார: ஸோயமீத்ருச:
ப்ரஹ்மைவாஹம் ஸம: சாந்த: ஸச்சிதானந்த லக்ஷண:
நாஹம் தேஹோ ஹ்யஸத்ரூபோ ஞானமித்யுச்யதே புதை:

இதுதான் ஞானசாரம்.

நானார் இங்கே நாடிய தென்னே?
ஊனார் உடலார் உலகார், உளமார்
டண்ணார் கலம்போல் மனதால் உலகம்
மனம் உல கில்லா மாசறும் ஆன்மா
நானது சாந்தன் நலிவிலாப் பொருளோன்
சச்சிதா னந்தன் சர்வ சுதந்தரன்
எனதுடல் என்னின் யானுட லில்லேன்
எனதுவீ டென்னில் யான்வீ டல்லேன்
மனதால் நினைப்பேன் மனம்யா னல்லேன்
உயிரால் உயிர்ப்பேன் உயிர்யா னல்லேன்
கண்யா னல்லேன் கண்ணால் காண்பேன்
செவியாற் செவிப்பேன் செவியா னல்லேன்
அறிவும் யானே அறிவது யானே
அறிபொருள் யானே ஐயமொன் றிலையே
ஞானம் ஞேயம் ஞாதா யானே
நான்சுயஞ் ஜோதி நலந்தீ தில்லேன்
ஆடையும் நூலும் அணிகளிற் பொன்னும்
போல்நான் என்றும் பொருளா யுள்ளேன்
பேர்வடிவாதிய பெருஞ்சுமை எனக்கேன்?
ஊர்ச்சுமை எனக்கேன் உள்ளவா றிருப்பேன்
படகிற் செல்வோன் பார்ப்பவை யெல்லாம்
படகுடன் செல்லும் பான்மையே போலும்
காமாலை கொண்ட கண்ணுக் கெல்லாம்
மஞ்சளாய்க் காணும் வழக்கம் போலும்
வட்டம் சுற்றும் வாண நெருப்பு
வட்டப் பொறிகளை வழங்கல் போலும்
மரமே வீடு, மண்ணே சுவர்கள்

கல்லே உருவம் கனகமே நகைவகை
பஞ்சே ஆடை பட்டே புடவை
ஆவது போலே ஆன்மா ஒன்றும்.

ஸர்பத்வேன யதா ரஜ்ஜுர் ரஜதத்வேன சுக்திகா
கடதவேன யதாப்த்வீ படத்வேன இவ தந்தவ:
கனகம் குண்டலத்வேன தரங்கத்வேன வை ஜலம்
சோரத்வேன யதா ஸ்தாணு: ஜலத்வேன மரீசிகா
.... ஸர்வம் பாதி ப்ரமாத்மகம்

உருப்பெ ருக்கிபோல் உள்ளது பெரிதாம்
தொலைவால் சிறிதாய்த் தோன்றுத லொப்பவே
சந்திரன் குளத்தில் சஞ்சலிப் பதுபோல்
மனவிகா ரத்தால் மாற்றமே தோற்றும்
இதயப் பரம்பொருள் என்றும் ஒன்றே
ஒருகூ ராக உள்ளே உணர்மின்
எல்லாம் ஒன்றே — என்றே அறிவீர்.

இதுதான் வேதாந்த முழக்கம் - இதை அறிந்து தத்போதம் விட்டு ஆத்மபோதத்தால் ஆனந்தம் உறுவோமாக.

ஸ்வதேஹம் அரணிம் க்ருத்வா ப்ரணவம் ச உத்தராரணிம்
த்யான நிர்மதனாப்யாஸாத் தேவம் பச்யேத் நிகூடவத்

ஓம் தத் ஸத்

---

காலன் நெருங்குகிறான். நீ பயின்ற கலைகளும் ஓயாமல் செய்துவரும் வியாகரண சாத்திர ஆராய்ச்சிகளும் உன்னைப் பாதுகாக்குமென நினைத்தால் நீ மூடனேயாவாய். கோவிந்தனிடம் அன்பு செலுத்தி அவனை வழிபடு. யமனின் பாசக் கயிற்றினின்று தப்ப இதுவே வழி.

பொருளின்மீதுள்ள பேராசையை விடு. உழைப்பால் அடைந்ததை வைத்துக் கொண்டு திருப்தி அடைவாயாக.

— சங்கரர்.



# ஆனந்தமாயி அம்மையிடம் அன்பர்கள் சம்பாஷணை

சோலன், செப்டெம்பர் 11, 1948.

ஓர் அரசாங்க அலுவலாளரும் அவரது மனைவியாரும் மாதாஜியின் தர்சனத்திற்காக வந்திருந்தார்கள். அவர்கள் அவரை முதன் முறையாகச் சந்தித்தார்கள். அவர்களின் வினா ஒன்றுக்கு மாதாஜி விடை கூறியது:

உங்களுக்கு விசுவாசம் இல்லையென்று சொல்லுகிறீர்களாயின் உங்களுக்கு விசுவாசம் இல்லை என்னும் திடநம்பிக்கையில் நீங்கள் உங்களையே நிலைநாட்ட முயற்சிக்க வேண்டும். எங்கு 'இல்லை' இருக்கிறதோ அங்கு 'ஆம்' உம் உள்ளார்ந்த இயல்பாய் இருக்கிறது. மறுப்புக்கும் விதியுரை கூறுதலுக்கும் அப்பால் இருப்பதாய் யார் உரிமை கொண்டாட முடியும்? விசுவாசம் வைத்திருப்பது தவிர்க்க முடியாதது. மனிதனில் ஆழ்ந்து நிலையாயிருக்கும் ஏதோ ஒன்றில் விசுவாசம் வைக்கிற இயல்பான மனமுடுக்கு கடவுட் பற்றாய் மலர்கிறது. இதற்காகவே மனிதப் பிறப்பு ஒரு பெரும் வரப்பேறு. யாரும் விசுவாசம் பெற்றிருக்க வில்லையென்று சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றில் அல்லது வேறொன்றில் நிச்சயமாக விசுவசிக்கின்றனர்.

'மனுஷ்' (மனிதன்) என்னும் சொல் 'மந்' (மனம்) இலும் ஹ்ருஷ் (உணர்வுள்ள) இலுமிருந்து தருவிக்கப்பட்டது. அது மனதின் உணர்வையும் விழிப்பையும் குறிக்கிறது. மனிதனின் இயல்பான தொழில் தன்னறிவு (ஆன்ம அறிவு) பெறுதலே என்பதை இது காட்டுகிறது. பிள்ளைகள் வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளும் பொழுது அவர்கள் கடிதலையும் கண்டிப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் கூட எப்போதாயினும் மென்மையான தண்டனை மனிதனுக்கு வழங்குகிறார் — இது அவரது கருணையின் அறிகுறி மாத்திரமே. உலகியல் நோக்கு நிலையிலிருந்து அவ்வகையான அடிகள் அற முடிவாக வேதனையுள்ளதாகக் கருதப்படுகின்றன; ஆனால் உண்மையாக அவை ஒரு மனமாற்றத்தை உண்டாக்கி அமைதிக்கு வழிகாட்டு

கின்றன. உலகியல் மகிழ்ச்சியைக் கலைப்பதினால் அவை மனிதனைத் தலைசிறந்த பேரின்பத்திற்குப் பாதையைத் தேடும்படி தூண்டுகின்றன.

மனிதவுடல் மூச்சுவிடுவதாற் சீவிக்கிறது என்பது நியதமாக உண்மையானது; இதனால் அங்கு துன்பம்* இருக்கிறது. வாழ்வின் பயணத்தில் இரு வகையான யாத்திரிகர் இருக்கின்றனர். ஒருவர் சுற்றுப் பிரயாணஞ் செய்பவர் போல் பொழுதுபோக்குக் காட்சி, ஊர் ஊராய்ச் சுற்றித் திரிதல், ஓர் அனுபவத்திலிருந்து இன்னொன்றுக்குப் பொருந்தச் செய்தல் முதலியவற்றில் ஆர்வமுடையவராக இருக்கிறார்; மற்றவர் தம் மெய் வீட்டிற்கு, தன்னறிவிற்கு நடத்திச் செல்லும் மனிதனின் உண்மையான தத்துவத்திற்கு முரணில்லாத நெறியில் நடக்கிறார். பொழுதுபோக்குக் காட்சியும் இன்ப நுகர்ச்சியும் நோக்கமாக மேற்கொண்ட பயணத்தில் துயரம் கட்டாயமாக நேரிடும். ஒருவரின் உண்மையான வீடு கண்டு பிடிக்கப்படாத வரைக்கும் துன்பம் தவிர்க்க முடியாதது. வேறுந் தன்மைக் கருத்தே கடுந்துயரத்தின் மூலகாரணம். ஏனெனில் அது திரிபில், இருமைக் கருத்தில் அடிகோலப்பட்டது. இது காரணமாகவே ஞாலம் 'டு-நிய' (இருமையை ஆதாரமாகக் கொண்டது) என்று சொல்லப்படுகிறது.

ஒரு மனிதரின் நம்பிக்கை அவரது சூழ்நிலையாற் பெரும்பாலும் தூண்டப்படுகிறது; ஆகையால் அவர் பரிசுத்தரினதும் அறிஞரினதும் சங்கத்தைத், தேர்ந்தெடுக்க வேண்டும். நம்பிக்கைஎன்பதுஒருவரின்ஆன்மாவில்நம்பிக்கைகொள்

* மனித சீவியம் பொதுவாக உயிரினச் சீவியம், மூச்சு விடுதலிற் றங்கியிருக்கிறது; அது சர்வ சம நிலையினது குழப்பத்தின் அடையாளமே. இக் குழப்பத்தால் முழுப்படைப்பும் தனிச் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. மூச்சு விடுதற் செயன்முறை உள் நோக்கியதும் வெளி நோக்கியதுமான இருமை இயக்கத்தையும் இரண்டிற்கும் இடையில் ஓர் ஒழுங்கான ஓய்வையும் குறிக்கிறது. இயக்கத்திற்குரிய தூண்டுதலை அகற்றுவதனால், உறக்கம், ஒடுக்கம், சாந்தம் அடையப் பெறுவதனால் இசைவிணக்கம் அடையப்படலாம். இது யோக மூலம் நிகழக் கூடியது. எப்போது ஒருவர் நிறை சமநிலையில் இருக்கிறாரோ அங்கு மூச்சு விடுவதற்கு ஆவசியகம் யாதும் இல்லை.



வது என்று பொருள் படுகிறது; அனாத்மாவை ஒருவரின் ஆத்மாவாகத் தவறாகக் கருதுவது நம்பிக்கையின்மை.

கடவுட் கிருபையால் தன்னையறிதல் நிகழ்வதற்கு எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன; என்றாலும் வேறு சமயங்களில் அவர் சிலரில் உண்மையை நாடி ஆர்வத் துடிப்பான ஆவலை எழுப்புகிறார். முதல் நிலைமையிற் பேறு தானாகவே சம்பவிக்கிறது; இரண்டாவதில் அது ஆய்வுகளால் உண்டாகும்படி செய்யப்படுகிறது. ஆனால் யாவும் அவரது கருணையால் மட்டும் அனுகூலமாகிறது.

தன் வினைகளைச் செய்பவன் தான் என்று மனிதன் எண்ணுகிறான்; ஆனால் உள்ளபடி யாவும் 'அங்கு' நடத்தப் படுகிறது; இணைப்பு 'அங்கு' உண்டு; உற்பத்தி நிலையமுங் கூட — ஆயினும் 'நான் செய்கிறேன்' என்று மக்கள் சொல்கிறார்கள். எத்துணை அற்புதமானதாய் அது இருக்கிறது! எல்லா முயற்சிகள் செய்தும் ஒருவர் புகை வண்டியைப் பிடிக்கத் தவறுகிறார். எங்கிருந்து ஒருவரின் எல்லா இயக்கங்களும் இயக்கப்படுகின்றன என்பதை இது தெளிவாக்குகிறதில்லையா? ஒருவருக்கு எங்கேனும், ஏதாவது நேரத்தில், ஏதேனும் நிகழ வேண்டியது, யாவும் அவரால் தீர்மானிக்கப்படுகிறது; அவரது திட்டங்கள் நிறைவுடையன.

கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு நித்திய சம்பந்தம் இருக்கிறது. ஆனால் அவரது லீலையில் அது ஓரொரு காலம் இருக்கிறது; ஓரொரு காலம் பிரிக்கப்பட்டிருக்கிறது அல்லது திட்டமாகப் பிரிக்கப்பட்டது போற் தோன்றுகிறது; அது உண்மையாக அப்படியன்று; ஏனெனின் அச் சம்பந்தம் நித்தியமானது. மேலும் வேறொரு நோக்கிலிருந்து பார்க்கும்போது சம்பந்தம் போன்ற வகையான விஷயம் யாதும் இல்லை. ''நான் தங்களிடம் புதிதாக வந்தவன்'' என்று இவ்வுடம்பைச் சந்திக்க வந்த யாரோ ஒருவர் சொன்னார். ''உண்மையாக என்றும் புதிதும் என்றும் பழையதுமே!'' என்னும் மறுமொழியை அவர் பெற்றார்.

உலகத்தின் ஒளி தோன்றி மறைகிறது; அது நிலையில்லாதது. நித்தியமாயிருக்கும் ஒளி ஒருகாலும் அழிக்கப்பட முடியாது. இந்த ஒளியால் நீங்கள் புற ஒளியையும்

உலகிலுள்ள யாவற்றையும் பார்க்கிறீர்கள்; அது என்றும் உங்களுக்குட் பிரகாசிக்கும் காரணத்தினால் மட்டும் நீங்கள் புற ஒளியைக் காண முடிகிறது. இவ்வுலகில் உங்களுக்குக் காட்சியளிக்கும் எதற்கும் காரணம் உங்கள் உள்ளே உள்ள பெரும் ஒளியே; மேலும் பொருட்களின் சத்தாகிய தலைசிறந்த அறிவு உங்கள் உருவின் அகத்தில் மறைந்திருப்பதன் காரணமாக மட்டுமே நீங்கள் யாதொரு விதமான அறிவையும் ஈட்டத்தக்கதாயிருக்கிறது.

மனித மூளையை ஒரு மரத்தின் வேருக்கு ஒப்பிடலாம். வேருக்கு நீர் பாய்ச்சினால் செடியின் ஒவ்வொரு பகுதிக்கும் ஊட்டம் பரவுகிறது. நீங்கள் உங்கள் மூளைகளைப் படைத்திருக்கிறது என்று சொல்லுந் தறுவாய்கள் உள. இது எப்போது நிகழ்கிறது? நீங்கள் புற விஷயங்களில் அதிக கவனம் செலுத்தி இருக்கும்போது. ஆனால் நீங்கள் உங்கள் வீட்டிற்குத் திரும்பிப்போய் உங்கள் அன்பிற்குரியவர்களுடன் உரையாடியதும் உங்கள் தலைப்பாரம் குறைந்து நீங்கள் மகிழ்ச்சி நிரம்பியவர்களாய் இருக்கிறீர்கள். உங்கள் மூளை உங்களுக்கே உரியதாயிருப்பதால் உங்கள் சொந்தப்பணி களைப்பை உண்டாக்குவதில்லை என்று சொல்லப்படுவதற்கு இதுவே காரணம். உண்மையாகப் பேசுகில் எல்லாப் பணியும் உங்கள் பணியே — ஆயினும் இதை எப்படி நீங்கள் புரிந்து கொள்ள முடியும்? உண்மையாக முழுவுலகும் உங்களுடையதே, உங்கள் ஆன்மாவினது, உங்கள் உண்மையானசொந்தம்-ஆனால்நீங்கள்‘மற்றவர்களை’ப்பார்ப்பதுபோலவே அதை வேறானதாய்க் காண்கிறீர்கள். உங்களுடைய சொந்தமானதாய் அறிவது மகிழ்ச்சி தருகிறது; ஆனால் அது உங்களுக்கு வேறாக இருக்கிறது என்னும் சிந்தை துயரம் உண்டாகச் செய்கிறது. இருமையைக் காண்பதென்பது துன்பம், சச்சரவு, கடுமுயற்சி, சாவு என்று பொருள்படுகிறது. பிதாஜி* ஏதோ ஒருவிதமான சாதனையில் ஈடுபடுங்கள்.

வினவுபர்:— அது எல்லாம் கடவுளைப் பொறுத்தது.

மாதாஜி:— அப்படியே! இதை எப்பொழுதும் மனதில் வையுங்கள். ஒவ்வொரு விஷயமும் கடவுளைப் பொறுத்ததே;

* பொதுவாக மாதாஜி ஆடவர்களை இவ்வாறே விண்ணப்பிக்கிறார்.



அவர் விரும்புவதுபோல் அவர் பயன்படுத்த வேண்டிய அவரது கைக்கருவியே நீங்கள். ‘யாவும் அவருடையவே’ என்பதின் உட்பொருளைப் புரிந்து கொள்ள முயற்சியுங்கள்; உடனே எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் சுவாதீனமானவராய் உணர்வீர்கள். அவரை நீங்கள் சரணடைந்ததின் பயன் என்னவாயிருக்கும்? யாதும் அயலாய்த் தோன்றாது; யாவும் உங்கள் சொந்தமானதாய், உங்கள் ஆன்மாவாய் இருக்கும்.

வேறாந் தன்மைச் சிந்தையை பக்தியாய் உருக்குங்கள் அல்லது ஞானத்தால் எரியுங்கள் - ஏனெனின் யாது உருகுகிறது அல்லது எரிகிறது? எது தன் இயற்கையால் உருக்கப்பட அல்லது எரிக்கப்படக் கூடுமோ அது மட்டுமே; அதாவது உங்கள் ஆன்மாவைத் தவிர ஏதோ ஒன்று இருக்கிறதென்னும் கருத்தே. பிறகு யாது நிகழும்? நீங்கள் உங்கள் ஆன்மாவை அறிகிறீர்கள்.

குருவினது சக்தியின் பயனால் யாவும் நிகழக் கூடியதாகிறது; ஆகையால் ஒரு குருவை நாடுங்கள். அதற்கிடையில், எல்லா நாமங்களும் அவரது நாமமாயிருப்பதால், எல்லா ரூபங்களும் அவரது ரூபமாயிருப்பதால், அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து உங்கள் இணைபிரியாத கூட்டாளியாய் வைத்திருங்கள். அதேசமயம் அவர் நாமரூபமற்றவர் கூட; ஏனெனின், பரமனுக்கு யாவுமாய் யாவும் அல்லவுமாய் இருப்பது சாத்தியமானது. நீங்கள் ஒரு குருவைக் கண்டு பிடியாத வரையில் உங்களுக்கு மிகவதிகமாகப் பிடித்தமாயிருக்கும் அவரது நாமம் அல்லது ரூபத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்; மேலும் அவர் தம்மை உங்களுக்குச் சற்குருவாய் வெளிப்படுத்துமாறு ஓயாது பிரார்த்தியுங்கள். உண்மையான உண்மையில் குரு அகத்திலே வசிக்கிறார்; மேலும் உட்குருவை நீங்கள் கண்டுணர்ந்தாலொழிய ஒன்றும் அடைதல் முடியாது. உங்களுக்குக் கடவுளை நோக்கித் திரும்ப நாட்டம் இல்லாவிட்டால், ஒரு வகுத்த கால அட்டவணையைப் பின்பற்றும் கடமையுடைய பள்ளிப் பிள்ளைகள் போல ஒரு தினசரிச் சாதனைக் கிரமத்தால் உங்களைக் கட்டுப்படுத்துங்கள்.

பிரார்த்தனை உங்கள் இருதயத்திலிருந்து இயற்கையாகப் பெருகாதிருக்கும் பொழுது, ‘‘எதற்காக நான் நிலையற்ற இவ்வுலகப் பொருட்களில் இன்பம் காண்கிறேன்?’’

என்று உங்களையே வினாவுங்கள். ஏதும் புறப்பொருளை நீங்கள் வாஞ்சித்தால் அல்லது ஓர் ஆளில் சிறப்பாகப் பற்றுக் கொள்வதாய் உணர்ந்தால், நீங்கள் தயங்கி, ''கூர்ந்து பாருங்கள். இதன்பகட்டால்நீமயக்கப்படுகிறாய்!'' என்று உங்களுக்கே சொல்ல வேண்டும். கடவுள் இல்லாத இடம் ஒன்று இருக்கின்றதா? வீட்டுக்காரரின் ஆசிரமாகிய குடும்ப வாழ்க்கையை ஓர் ஆசிரமமாய் ஏற்றுக் கொண்டால் அதுவும் உங்களை அவரை நோக்கி நடாத்தும். இவ்வியல்பில் வாழப்பட்டால் அது தன்னிறைவுப் பேற்றை நோக்கி மனிதன் முன்னேறுவதற்கு உதவி புரிகிறது. ஏனினும், நீங்கள் பெயர், புகழ் அல்லது பதவி போன்ற ஏதேனும் ஒன்றுக்குப் பேராசை கொண்டால் கடவுள் அதை உங்களுக்குக் கொடுத்தருள்வார். ஆனால் நீங்கள் மன நிறைவு கொள்ள மாட்டீர்கள். கடவுளின் இராச்சியம் ஒரு முழுமை; நீங்கள் அதன் முழுமைக்குள் உட்புக விடப்பட்டாலொழிய நீங்கள் மன நிறைவுள்ளவராயிருக்க முடியாது. அவர் உங்கள் மன நிறைவின்மையை கிளர்ச்சியாய் வைத்திருப்பதற்காக கொஞ்சம் மட்டும் கொடுத்தருள்கிறார்; ஏனெனின் மன நிறைவின்மையின்றி முன்னேற்றம் இருக்க முடியாது. அழிவில்லாதவரின் சந்ததியினராகிய நீங்கள் ஒருகாலும் சாவின் அரசுக்குப் பொருந்துமாறு அமைய முடியாது; அன்றியும், கடவுள் உங்களை அதற்குள் நிலைத்திருக்க விடுவதில்லை. உங்களுக்கு ஒரு சிறிய விஷயத்தைக் கொடுப்பதனால் அவர் தாமாகவே உங்களில் பற்றாக்குறைச் சிந்தையை எழுப்புகிறார்; ஏனெனின், உங்கள் நாட்டத்தை அதி மேன்மையான ஒன்றுக்குத் தூண்டுவதற்காக மட்டுமே. உங்களைத் தூண்டும் அவரது முறை இதுவே. இப்பாதையிற் செல்லும் வழிப்போக்கர் அதைக் கடினமானதாய்க் கண்டு மனக் குழப்பமடைகிறார்; ஆனால் காண்பதற்குக் கண்கள் உடையவொருவர் யாத்திரிகர் முன்னோக்கிச் செல்கிறார் என்பதைத் தெளிவாகக் காண முடியும். பட்டறியப்படும் துன்பம் உலகப் பொருள்களிலிருந்து பெற்ற இன்பம் அனைத்தையும் சாம்பலாகும்படி எரிக்கிறது. 'தபஸ்யா' என்று அழைக்கப்படுவதும் இதுவே. யாது ஆன்மிகப்பாதையில் ஒருவருக்குத் தடை செய்கிறதோ, அது தனக்குள் எதிர்கால துன்பத்தின் விதைகளை வைத்திருக்கிறது. ஆயினும் துயரம், இத்தடைகளின் விளைவைப் பற்றிய கடுந்துயர் முதலியன உள் உணர்வை நோக்கிய ஒரு விழிப்பின் தொடக்கமே.



சோலன், செம்டெம்பர் 21, 1948.

ஓர் இளஞ் சிறுமி மாதாஜியுடன் பேசிக கொண்டிருந்தாள். அவள் சொன்னது.

''நான் தியானிப்பதற்கு அமரும் பொழுது ஏதேனும் ஓர் உருவத்தைத் தியானிக்கக் கருதவில்லை; ஆனால் எப்படி உருவற்றதிற் றியானிப்பது சாத்தியமாகும்? நான் தியானிக்க முயலும்பொழுது ஓரொரு காலம் தெய்வங்களின் உருவங்கள் என் மனதிற்கு முன்னிலையில் மிதந்து தோன்றுவதை நான் கவனித்திருக்கிறேன்.

**மாதாஜி:** உன் மனதில் எழும் உருவம் எதுவெனினும் அதை நீ தியானிக்க வேண்டும்; எவ்வடிவத்தில் கடவுள் உனக்குக் காணப்படுகிறார் என்பதைத் திட்பமாக அவதானி. ஒரே வடிவம் எல்லாருக்கும் பொருத்தமாயிருப்பதில்லை. சிலருக்கு ராமர் உறுபல உதவியளிக்கிறதாயிருக்கலாம்; சிலருக்குச் சிவன், மற்றவர்களுக்குப் பார்வதி: இன்னும் மற்றவர்களுக்கு உருவற்றது. அவர் உறுதியாக உருவற்றவரே; ஆனால் அதேசமயம் அவர் உனக்கு வழிகாட்டுவதற்காக எக் குறிப்பிட்ட வடிவில் உனக்குத் தோன்றலாம் என்பதைக் கவனி. அதன் பயனாக அவர் வடிவங்களில் எது உன் மனதிற்கு வருகிறதோ அதையே நீ அதன் நுட்ப விபரங்கள் அனைத்தினதும் வழியே தியானிக்க வேண்டும்.

பின்வருமாறு பிரார்த்தி: தியானிப்பதற்கு அமரும் பொழுது முதலில் ஒரு தெய்வத்தின் உருவத்தைத் தியானி. பிறகு அவர் தம் ஆசனத்தில் எழுந்தருளியதாய்க் கருதி அவருக்கு முன்பாகத் தலைவணங்கி செபம் செய். நீ செபத்தை முடித்ததும் இன்னும் ஒருமுறை வணங்கு; மேலும் அவரை உன் இருதயத்தில் நிறுவியதும் உன் ஆசனத்தை விட்டு விலகு. உன்னால் பிரம்மத்தில் தியானிக்க முடியாவிட்டால் இதுவே சுருக்கமாக உன் பயிற்சியாய் இருக்கலாம்.

எந் நேரங்களிலும் புறனடையின்றி உனக்கு மிகச் சிறந்ததை அவர் செய்வார், செய்கிறார் என்று எக்காலத்திலும் நம்பிக்கை கொண்டிரு. இவ்வாறாகச் சிந்தி: எனக்கு உதவி செய்வதற்காக அவர் குறிப்பிட்ட தோற்றத்தில் எனக்குத் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் உருவத்துடனும்

உருவம் இல்லாமலும் கூட இருக்கிருர்; முழுவுலகும் அவருக்குள்ளும் அவரால் வியாபிக்கப்பட்டு மிருக்கிறது. 'சற்குருவே உலக குரு; உலக குருவே சற்குரு'' என்று இதற்காகவே சொல்லப் பட்டிருக்கிறது.

முன்சொல்லப்பட்டது சிறப்பாக உனக்கே கருதப்பட்டுள்ளது. அதுவே ஒவ்வோர் ஆளுக்கும் பொருந்துவதில்லை. எவ்வளவுக் கெவ்வளவு அதிகம் நீ அவரைத் தியானிக்கிருயோ அவ்வளவுக் கவ்வளவு உன் முன்னேற்றம் அதி விரைவானதாயிருக்கும். திட்பமாக அவர் உருவமற்றதாயு மிருப்பது போல ஏதாவது உருவம் உன் மனதில் உதித்தால் அது அவரே; யாது தானுக வருகிறது என்பதைக் கவனி.

# சங்கரர் பொன்மொழிகள்

பெண்ணின் உடலழகைக் கண்டு மதிகலங்காதே. அழகிய உடலானது இறுதியில் அழியும் சதைதானே என்பதை அடிக்கடி யோசித்துப்பார்! புலன்களை அடக்கு. உலகப் பற்றை விடு.

நோயும் 'நான்' என்ற அகந்தையும் ஆட்சி செலுத்தும் இவ்வுலகம் சோகமயமானது; தாமரை இலை மீதிலுள்ள நீர்த்துளிபோல நிலையற்றது. இதனை உணர்வாயாக.

நீ சம்பாதிக்கும் வரையில்தான் சுற்றத்தார் உன்மீது பரிவு காட்டுவர். வளம் குன்றியதும் உன்னை ஏனென்று கேட்போர் அரிதாய் விடுவர்.

உன் உடலில் மூச்சுள்ள வரையில்தான் உனக்கு உபசாரம் நடக்கும். கடைசி மூச்சு விட்டதும், உன் மனைவியும் உன் சடலத்தைக் கண்டு அஞ்சுவாள்.



# வீடு சொர்க்கமான கதை

(சுவாமி சிவானந்தர்)

ஒருநாள் மாலை தேக்சந்த் தன் குருநாதர் கபீருடன் பேசிக் கொண்டிருந்தான். கபீர் அவனிடம் இல்லறத்திலிருந்து கொண்டே இறைவனை அடைய ஒருவன் எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகளைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தார்.

''நீ விரும்பினுல் சாஸ்திரங்கள் கூறுவதை அனுசரித்து உன் வீட்டையே சுவர்க்கமாக மாற்றலாம்'' எனவும் அவர் கூறினுர்.

தேக்சந்த் மிக ஆச்சரியமடைந்தான். ''என்ன மகராஜ்! வீட்டைச் சொர்க்கமாக்கவா? அது என்றும் முடியாதது ஒன்று என்றல்லவா நான் இதுவரை கேள்விப்பட்டிருக்கிறேன். தவிர கானகம் புகுந்து பல வருடங்கள் கடுந்தவம் செய்தாலொழிய இறைவனை அடைதல் கைகூடாதென்றும், மனைவி, குழந்தைகள், செல்வம் முதலியவை சாதகனெருவனின் முன்னேற்றத்திற்கான இடையூறுகள் எனக் கேள்விப் பட்டிருக்கிறேன். இது இவ்வாறிருக்க வீட்டை சுவர்க்கமாக்கலாம் என்று நீங்கள் கூறுவது மிகுந்த விந்தையாகவல்லவோ இருக்கிறது'' என்று கூறினுன் தேக்சந்த்.

''அதை நான் உனக்கு விளக்குகிறேன். அது மிக எளிது. இக் காரியத்தை முடிக்கத் தேவைப்படுவது அடக்கமும் அமைதியும் கூடிய ஒரு மனைவி. தன் கணவனைக் கண்கண்ட தெய்வமாகக் கருதி, அவனது விருப்பங்களை உடனடியாகப் பூர்த்தி பண்ணுவாளேயாகில் தான் வசிக்கும் வீட்டைச் சுவர்க்கமாக மாற்றி விடுவாள். இவ்வாறு செய்வதால் அவள் தான் வாழ்க்கையின் குறிக்கோளை அறிவதோடல்லாமல் தனது கணவனையும் ஆத்மஞானத்தை அடையச் செய்கின்ருள். குழந்தைகளும் அறிவுக் களஞ்சியங்களாகி மாபெரும் யோகிகள் ஆவார்.

இன்னும் உன் முகத்தில் சந்தேகக் குறிகளை நான் காண்கின்றேன். உனக்குச் சந்தேகம் இருக்குமானல் நீ ஒருநாள் என் வீட்டுக்கு வா. நான் கூறுவதிலுள்ள உண்மையை உனக்கு உணர்த்துவேன்.

ஒரு வாரம் கழித்து ஒருநாள் திடீரென்று தேக்சந்த் கபீர் வீட்டிற்குச் சென்ருன். கபீர் துணிநெய்துகொண்டிருந்தார். அவரது மனைவி நூல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். கபீர் எழுந்து தேக்சந்தை வரவேற்றுத் தன்னருகே அமரும்படிச் செய்தார். தேக்சந்தின் குடும்ப நலத்தைப் பற்றியும் அவனது சாதனையில் முன்னேற்றத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்த கபீர் தன் மனைவியிடம் சிறிது களிமண் கொண்டு வரும்படி கூறினர். மறுவார்த்தையின்றி அவளும் அவ்வாறே கொண்டு வந்தாள். அடுத்ததாக அவர் சிறிது நெய் கொண்டு வரும்படி கேட்க அதுவும் கொண்டு வரப்பட்டது. அதன் பிறகு அவர் தன் மனைவியை நெய்யைக் களிமண்ணுடன் கலந்து நன்ருகப் பிசையும்படி கேட்டுக் கொண்டார். பின் அதைச் சிறு சிறு உருண்டைகளாகச் சட்டியிலிட்டு வறுக்கும்படி கூறினர். தேக்சந்த்இதையெல்லாம்பேச்சுமூச்சின்றி கவனித்துக்கொண்டிருந்தான். உருண்டைகள் வறுக்கப் பட்டவுடன் அவற்றைத் தூரஎறியும்படி தன்மனைவியைக் கபீர்கேட்டுக்கொண்டார். அவளும் அவ்வாறே செய்தாள். இதைப் புரிந்து கொள்ள தேக்சந்துக்கு முடியவில்லை. இது கபீரின் குடும்ப வழக்கம் என எண்ணி அவன் சும்மா இருந்து விட்டான். பிறகு கபீரும் அவரது மனைவியும் தத்தம் வேலையில் ஈடுபடத் தொடங்கினர்.

''மகராஜ்! அன்று நீர் என்னிடம் வீட்டைச் சுவர்க்கமாகமாற்ற எளியதொரு வழியைக்காண்பிப்பதாகக் கூறினீர்களே. இன்று அதை உங்களால் நிரூபிக்க முடியுமா?'' என தேக்சந்த் கேட்டான்.

''ஏன்! அன்று நான் கூறியதை அனுபவத்தில் செய்து காட்டியதை நீ இப்பொழுது பார்த்தாயே. உனக்காகவே நான் இவ்வளவு நெய், நேரம், உழைப்பு முதலியவற்றைச் செலவழித்தேன். ஆனல் நீ இன்னும் புரிந்து கொள்ள வில்லை'' என்று கூறினர் கபீர்.

''இவ்வளவுதானு? இதை என் மனைவியும் எளிதில்



செய்வாளே! வீட்டைச் சொர்க்கமாக மாற்ற இவ்வளவு தானு செய்ய வேண்டும்?'' என்ருன் தேக்சந்த்.

''சரி முயற்சி செய்து பார். இதன் விளைவை நீயே அனுபவிப்பாய்'' என அறிவுறுத்தினர் கபீர்.

தேக்சந்த் உடனடியாக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். சோதனையை சீக்கிரத்தில் செய்து பார்க்க அவன் விழைந்தான். அவன் மனைவி தன் தோழிகளுடன் தனதறையில் சீட்டாடிக் கொண்டிருந்தாள். தேக்சந்த் பொறுமையிழந்தான். மறுபதிலுக்குக் கூடக் காத்திராமல் அவளைப் பல தடவைகள் உரக்கக் கூப்பிட்டான். தன் கணவனின் தொந்தரவு பொறுக்க முடியாமல் உள்ளே நுழைந்த அவளிடம் தான் அவளுடன் முக்கிய காரியம் செய்ய விருப்பதால் அவளது சிநேகிதிகளை அனுப்பிவிடுமாறு கூறினன். அவளோ மறுத்தாள். ஆனல் தூண்டுதலின் பேரில்சில நிமிடங்கட்குள் விளையாட்டை முடித்து விட்டு வருவதாகக் கூறிச் சென்ருள். தேக்சந்த் தனதறையில் தன் முயற்சியைப் பற்றி நினைத்துக் கொண்டு ஒவ்வொரு நிமிடமாக எண்ணிக் கொண்டிருந்தான்.

தன் தோழிகளிடம் விடைபெற்றுக் கொண்ட அவள் மறுமுறையும் தன் கணவன் முன் வந்தாள். தேக்சந்த் சிறிது களிமண் கொண்டு வரும்படி கூறினன்.

இந்திரா:— அட கடவுளே! இந் நேரத்தில் களி மண்ணைக் கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இந்தத் தலை போகும் காரியத்திற்காகவா என்னுடைய விளையாட்டைக் கெடுத்தீர்கள்.

தேக்சந்த்:— என்னுடன் இப்பொழுது தர்க்கம் செய்யாதே. சொன்னபடி கொஞ்சம் களிமண் கொண்டுவா. (களிமண் கொண்டுவரப் படுகிறது.)

இந்திரா:— இதோ களிமண். என் தோழிகளுடன் விளையாட நான் செல்கின்றேன். இதற்கிடையில் உங்கள் கையிலிருக்கும் பொருள் உங்கள் தலைக்குள்ளிருப்பதுதானு என்பதைத் தெளிவு படுத்திக் கொள்ளுங்கள். (உடனே வாசலை நோக்கிப் பறந்தோடுகிருள்.)

தேக்சந்த்:— போகாதே. காரியம் இன்னும் முடிந்துவிடவில்லை. கொஞ்சம் நெய் கொண்டு வா.

இந்திரா:— ஏன் இன்று ஒரு மாதிரியிருக்கிறீர்கள். நீங்கள் பேசுவதும் புதிதாயிருக்கிறது. உங்களுக்கு உடல்நலம் சரியாகத்தானே இருக்கிறது? உடல்நலம் சரியில்லையேயாகில் டாக்டருக்கு விஷயத்தைத் தெரிவிக்கிறேன்.

தேக்சந்த்:— நான் நலமே. இன்னும் சில நிமிடங்களில் நான் இவற்றைக் கேட்கும் காரணங்களை நீயே புரிந்துகொள்வாய். இப்பொழுது கொஞ்சம் நெய் கொண்டுவா.

இந்திரா:— சரி சரி. உங்களிஷ்டப்படி. (நெய்யைக் கொண்டு வருகிறாள்.) இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்.

தேக்சந்த்:— இவ் வீட்டை சுவர்க்கமாக்கப் போகிறேன்.

இந்திரா:— ஹா! ஹா! வீடு சொர்க்கமாகப் போகிறதா? அது உண்மையாகவே இப்பொழுது சொர்க்கம் தான்—நான் என்னுடைய தோழிகளுடன் சேர்ந்திருப்பேனேயானால். உண்மையாகவே இப்பொழுது உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. இன்று உங்களைப் பார்த்தவுடனே எனக்கு இந்த சந்தேகம் எழுந்தது.

தேக்சந்த்:— அனாவசியமாக உளறாதே. களிமண்ணுடன் நெய்யைக் கல.

இந்திரா:— (கோபத்துடன்) என்ன உங்களைப்போல் பைத்தியத்தின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நான் இவ்வுயரிய நெய்யை வீணாக்கப் போவதில்லை. நான் இன்னும் நல்ல நிலையிலேயே இருக்கின்றேன். என்னையும் பைத்தியம் என்று நினைக்கிறீர்களா? இன்று குடித்திருக்கிறீர்களா என்ன? உங்கள் அறைக்குச் சென்று இரண்டு மணிநேரம் தூங்குங்கள். எல்லாம் சரியாகி விடும்.'' (நெய்யை எடுத்துக் கொண்டு வாசலுக்கு விரைகிறாள்.)

தேக்சந்த்:— (அவளைத் தடுக்கிறான்.) நான் சொன்னபடி செய். கேள்வியொன்றும் கேட்காதே. தர்க்கம் செய்வாயாகில் உதை விழும்.



இந்திரா:— நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? களிமண்ணுடன் கலந்து நெய்யைப் பாழாக்க நான் விரும்பவில்லை.

தேக்சந்த்:— (ஆத்திரத்துடன்) நான் சொன்னபடி செய்யாவிட்டால் உனக்கு நன்றாக அடி விழும். நம்வீடு சுவர்க்கமாவதில் உனக்கு விருப்பமில்லையா?

இந்திரா:— இந்த விநோத எண்ணங்களை உங்கள் தலைக்குள் திணித்தது யார்? நீங்கள் விரும்பினால் கடைக்குச் சென்று கொஞ்சம் நெய்யை வாங்கி அதை உங்கள் விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் கொட்டுங்கள். நான் விசேஷமாகத் தயாரித்த இந்த நெய்யை வீணாக்கமாட்டேன். வீடு சொர்க்கமாகப் போகிறதாம். (தேக்சந்த் அவளை அடிக்கிறான்.)

இந்திரா:— ஏ! கமலா, வஸந்தா, சுலோசனா இங்கு வாருங்கள். எனது கணவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. என்னை உதைக்கிறார் பாருங்கள். என்னைக் காக்க ஓடி வாருங்கள். இன்னும் சிறிது நேரத்தில் என்னைக் கொன்று விடுவார். (அக்கம் பக்கத்தவர் வீட்டினுள் நுழைகின்றனர். கபீரும் வருகிறார். அவர்கள் தேக்சந்தைத் தடுத்து நிறுத்தி ஒரு பெஞ்சியில் அமர்த்துகின்றனர்.)

நந்தலால்:— (அடுத்த வீட்டுக்காரர்) என்ன விஷயம் தேக்சந்த்? ஏன் இப்படி.........

இந்திரா:— ஓ அதுவா! இன்று அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. தயவு செய்து யாராவது அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள். இன்றேல், என்னை இன்று கொன்று விடுவார்.

தேக்சந்த்:— நந்தலால் நான் பைத்தியமல்ல. இந்த வீட்டைச் சுவர்க்கமாக மாற்ற விரும்பினேன். என்னுடன் ஒத்துழைக்க அவள் மறுத்தாள். எனவே அவளை நான் அடித்தேன்.

நந்தலால்:— என்ன? வீட்டைச் சொர்க்கமாக்க முயற்சித்தீர்களா?

**தேக்சந்த்:—** இதோ பாருங்கள்! மனைவி யொருவள் அவளது கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பாளாகில், அவர்கள் வசிக்கும் வீடு சுவர்க்கமாக மாற்றப்படும். நான் சொன்னபடி அவளைச் செய்யச் சொன்னேன். (நடந்ததை விவரித்துக் கூறுகிறான்.) அவள் செய்ய மறுக்கிறாள். ஆதலால் நான் அவளை அடித்தேன்.

(அவனது கதையைக் கேட்ட அனைவரும் 'கொல்' லென்று நகைத்து உண்மையிலேயே அவன் பைத்தியம் தான் என முடிவு கட்டுகின்றனர். இத்தருணம், கபீர் முன்னே வந்து தான் தேக்சந்தைப் பார்த்துக் கொள்வதாகவும், எல்லோரும் அவரவர் வீட்டிற்குச் செல்லும்படியும் கேட்டுக் கொள்கிறார். எல்லோரும் சென்ற பிறகு கபீர் அவனிடம் கீழ்வருமாறு கூறுகிறார்.

**கபீர்:—** வீட்டைச் சொர்க்கமாக்கும் வழி இதுவல்ல. சொன்னதற்கு மாறாகச் செய்து இப்பொழுது வீட்டை நரகமாக்கி விட்டீர்கள். எந்த வீட்டில் கணவனும் மனைவியும் சண்டையிடுகின்றனரோ அதுவே மிகக் கொடிய நரகம்- அங்கிருந்து அமைதி அனைத்தும் மறைந்து விடுகிறது. கணவனும் மனைவியும் இணைந்து செல்லாத வீட்டில் துளியேனும் இன்பத்தைக் காணுதல் அரிது. நான் அன்று என் வீட்டில் செய்து காண்பித்ததின் அடிப்படைத் தத்துவத்தை நீ அறவே புரிந்து கொள்ளவில்லையெனத் தெரிகிறது. நான் செய்த செயலை மட்டும் திருப்பிச் செய்வதால் நீ வீட்டைச் சுவர்க்கமாக்கிவிட முடியாது. ஒரு ரூபாய் பெறுமானமுள்ள நெய்யைச் செலவழிப்பதால் ஒருவன் சொர்க்கத்தை அடைவானேயாகில், இவ்வுலகிலுள்ள அனைவரும் அவரவர் வீட்டைச் சுவர்க்கமாக்கி விடுவர் அல்லவா? அது அவ்வாறல்ல. அன்று நீ பார்த்ததன் தத்துவம் இதுவே. தன் கணவனுக்கு மனைவியொருவர் எப்பொழுதும் கீழ்ப்பணிய வேண்டும். ஆனால் மனைவி தான் இவனை மணந்து கொண்டோமே என்பதற்காகக் கடனே என்று காரியங்களைச் செய்வதல்ல இதன் பொருள். அவள் செய்வதெல்லாம் பணிவு, அன்பு, அடக்கம், பொருந்தியதாக ஒரு மனதுடன் செய்யப்பட வேண்டும். இதை அவளது விருப்பங்களை அவள் வெளியிடுவதற்கு முன்பே பூர்த்தி செய்வதாலும், உனது நற்குணங்களாலும் எளிதில் பெற்று விடலாம். அவளது இதயத்தை நன்கு அறிந்து அவளது குணங்களை அறிந்து அவளிடத்தில் அன்



# கேனோப நிஷத சாரம்

(ஸ்ரீ சுவாமி சிவானந்தர்)

—முன் இதழ்த் தொடர்ச்சி—

25. சுருதிகள் பிரம்மத்தை ''நேதி, நேதி'' (இது அன்று, இது அன்று) க்கோட்பாட்டின் மூலம் விளக்குகின்றன.

26. சிஷ்யன் நுட்பமான, கூர்ந்த, தூய, ஒன்றித்த அறிவாற்றல் பெற்றிருக்க வேண்டும்.

27. பிரம்மம் உலகப் பொருட்கள் போல் அறியப்பட முடியாது. அது உலகப் பொருட்களின் இயல்பை மற்றவர்கட்கு விளக்கிக் கூறுவது போல் வெறுஞ் சொற்களால் விரித்துரைக்க முடியாது.

28. பிரம்மம் அறியப்பட்டதிலிருந்தும், காணப்படும் முழுவுலகிலிருந்தும் அறியப்படாததிலிருந்துங் கூட வேறானது.

29. பிரம்மமே தனிமெய்ப்பொருள்; அது அனைத்திற்கும் அடிப்படையும் மூல முதலும்.

30. பிரம்மம் ஒரு விடயமன்று. அது சர்வ வியாபக, இரகசிய, புரியாத சைதன்யம் அல்லது தூய தன்னறிவு.

31. பிரம்மம் உள்ளுணர்வு மூலம் அறியப்பட வேண்டும்.

---

முன்பக்கத் தொடர்ச்சி
புடன் நடந்து கொள்ள வேண்டும். இது உன் மனைவியை உன் கட்டளைகளை உடனே செய்து முடிக்கத் தூண்டும். உன் கட்டளைக்கு எதிர்பாராமல் அவளாகவே எல்லாவற்றையும் செய்து முடித்து விடுவாள். எந்த வீட்டில் கணவனும் மனைவியும் இத்தகைய நல்வாழ்க்கை வாழ்கின்றனரோ அதுவே உண்மையில் சொர்க்கம்''

32. பிரம்மத்தின் இயல்பை ஓர்ந்தறிவது மிகக் கடினம். பிரம்மத்தின் இயல்பை விளக்குவது மிகக் கடினம்; ஏனெனின் அப்படிச் செய்வதற்குச் சாதனமோ மொழியோ இல்லை.

33. தூயதும் நுட்பமுமான அறிவாற்றல் இயற்பண்பாகப் பெற்றவர்கள் உபநிஷதங்களின் நுட்பக் கருத்துகளை எளிதாகக் கிரகிக்க முடியும்.

34. பிரம்மம் புலன்களினதும் மனதினதும் அடையும் ஆற்றலுக்கப்பாலிருப்பதால் நாடுபவன் உபநிஷதங்களின் ஆராய்ச்சியும் ஓர் ஒளிபெற்ற ஆசிரியரின் அறிவுறுத்தல்களும் மூலம் மனதாற் கிரகித்தற்குரிய பிரம்மத்தின் விளக்கத்தை முதலிற் பெற வேண்டும்.

35. நாடுபவன் சாதன சதுட்டயம் (விவேகம் வைராக்கியம், சட்சம்பத்து, முமுக்ஷுத்துவம்) துணைச் சாதனமாகப் பெற்று இடையறாத தியானம் பயில வேண்டும். அப்போது மாத்திரம் அவன் பிரம்மஞானம் அடைவான். அவன் தன் கையிலுள்ள நெல்லிக்கனிபோல் பிரம்மத்தை அறிவான். அப்போது எல்லா ஐயங்களும் மயக்கங்களும் மறைந்து போகும்.

36. அறியப்பட்டதிலிருந்தும் அறியப்படாததி லிருந்தும் வேறானது பிரம்மம்.

37. பிரம்ம ஞானம் குருவிலிருந்து சிஷ்யனுக்கு பரம்பரையாக வரப் பெற்றது. கௌடபாதர் பிரம்ம வித்தையை கோவிந்த பாதருக்குக் கற்பித்தார். கோவிந்த பாதர் சங்கரருக்கும் சங்கரர் பத்மபாதருக்கும் மற்றவர்கட்கும் அறிவுறுத்தினர். மேலும் அவ்வாறே.

38. ஓர் ஒளி பெற்று ஆசிரியர் அல்லது அனுபூதியடைந்த ரிஷியின் அறிவுறுத்தலால் மட்டும் பிரம்மம் அறியப்படும். ஆனால் தருக்க வாதங்களால் அல்லது நுண்மதி, பெரும் விளக்கவுரைகள், தவம் அல்லது யாகக் கிரியைகள் முதலியவற்றால் அன்று.

39. மனிதனின் ஆன்மாவே ஆத்மன். உலகின் ஆன்மாவே பிரம்மம். ஆத்மன் பிரம்மத்துடன் அநந்நியமானது. (அதுவேயானது)



40. எதை வாக்கு விளக்குகிறதில்லையோ ஆனால் எது வாக்கை விளக்குகிறதோ அது மாத்திரம் பிரம்மம் என்று அறிக.

41. வாக்கு பிரம்மத்தை புலப்படச் செய்ய அல்லது விளக்க முடியாது. பிரம்மம் வாசாம கோசரமானது. (வாக்கிற் கெட்டாதது). வாக்கு பிரம்ம சக்தி அல்லது ஒளியால் தன்னை வெளியிடுகிறது.

42. வாக்கு எல்லையுள்ளது. எல்லைக்குட்பட்ட வாக்கு எவ்வாறு அநந்த பிரம்மத்தை வெளிப்படுத்த முடியும்.

43. பிரம்மம் மாத்திரம் வாக்கையும் அதன் உறுப்பு அல்லது வாக்கு இந்திரியத்தையும் விளங்கச் செய்கிறது. பிரம்மமே வாக்கின் வாக்கு. நாவின் நா.

44. பிரம்மம் வாக்கினுள்ளிருந்து அதை இயக்குகிறது.

45. இவ்வாத்மன் பிரம்மம் அல்லது பூமா. (அநந்தம் அல்லது அகண்டமானது.)

46. பிரம்மம் மேம்பட ஒண்ணாதது, பெரியது, வலியது, அனைத்திலும் மேலானது, சர்வ வியாபகமானது. ஆகையால் அது பிரம்மம் என்று அழைக்கப் படுகிறது.

47. பிரம்மம் நித்தியமானது, நிர்விகாரமானது, தற்பிரகாசமானது, அரூபமானது, வர்ணமின்றியது, குணமின்றியது, காலாதீதமானது, தேசாதீதமானது, பகுக்க முடியாதது, பிறவாதது, தானாக வுண்டாயது, சுயம்புவானது), தேய்வின்றியது, அழிவில்லாதது.

48. வேதாந்தம் பக்திமைக்கு எதிரானதன்று. அது தன்னயக் கருத்துடன் வழிபடுதலை வேண்டாமென வாதிக்கிறது.

49. ஒரு வேதாந்தி அல்லது ரிஷி ஒரு நிறைவான பக்தனே.

50. பராபக்தி அல்லது தலைசிறந்த பக்திமையும் ஞானம் அல்லது மெய்யறிவும் ஒன்றே.

51. மக்கள் வழிபடும் ஈஸ்வரன் ஒருவரின் சொந்த ஆன்மாவென்று வேதாந்தம் பகர்கிறது. அது ஒரு விரிந்த பக்தி நியமத்தை, உறுபல உயர்தர பக்திமை முறையைக் கற்பிக்கிறது.

## ஆன்மாவும் மனமும்

52. பிரம்மம் மனதினதும் கரணங்கள் அனைத்தினதும் செயல்களின் மௌன சாட்சியே.

53. எது மனதாற் கிரகிக்கப்பட முடியாதோ ஆனல் எது ஒரு பொருளைச் சிந்திக்கவும் புரிந்து கொள்ளவும் மனதைத் தூண்டுகிறதோ அதை மாத்திரம் பிரம்மம் என்று அறிக.

54. மனம் எல்லாக் கரணங்களுடனும் இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. அது எல்லா ஊக்க ஆற்றல்களின் முக்கிய ஆணையாளர்.

55. ஆசை, இச்சை, சூழ்ச்சி, சிரத்தை, அசட்டை, திண்மை, கோழைத்தனம், வெட்கம், நுண்மதி, அச்சம்— இவையனைத்தும் முடிவில் மனமே.

56. மனமே 'திருக்கு' அல்லது காண்போன்; அல்லது காணப்படுவது. ஆத்மனே காண்போன்; மனமே காணப்படுவது.

57. புலன்கள் விடயங்களின் பதிவுகளை மனதிற்குக் கொண்டு செல்கிறது. மனம் அவற்றை ஆத்மனின் முன்னிலையில் வைக்கிறது. ஆத்மன் அவற்றை மனதிற்குத் திரும்பக் கொடுக்கிறது. அப்போது மட்டும் விடயங்களைக் கிரகித்தல் நிறைவடைந்து முடிவுறுகின்றது.

58. எது கண்களாற் காணப்பட முடியாதோ ஆனல் எதனுல் கண்கள் காண முடிகிறதோ — அதை மட்டும் பிரம்மமாக அறிக.

59. பிரம்மம் கண்களாற் காணப்பட முடியாது; ஏனெனில் அது காட்சிப் பொருளன்று.



60. கண் விடயங்களின் வர்ணம், வடிவம், தரம், பருமன் முதலியவற்றை மனதிற்கு எடுத்துச் செல்லும் ஒரு வரையறை யுள்ள கருவி.

61. கண் தனது காணுஞ் சக்தியை அதன் மூலமுதலாகிய பிரம்மத்திலிருந்து மாத்திரம் பெறுகிறது.

62. கண் பிரம்மத்தின் ஒளியூட்டும் நுண்மதியால் விடயங்களை நோக்கி நகரச் செய்யப்படுகிறது.

63. பிரம்மமே காட்சியின் மெய்யான காணுத காண்போன். அது கட்செயல்களின் மௌன சாட்சி.

64. பிரம்மமே மனத் தொழிலகத்தின் ஆண்டை அல்லது உரிமையாளன். கண்கள் காதுகள் முதலியன பொது எழுத்தாளர். மனமே தலை எழுத்தாளன். நுண்ணறிவே காரியாதிகாரி.

65. எது காதுகளாற் கேட்கப்படாததோ ஆனல் எதனுல் காதுகள் கேட்க இயல்கின்றனவோ — அதை மாத்திரம் பிரம்மம் என்று அறிக.

66. பிரம்மம் ஒலியை நோக்கிக் காதுகளைச் செலுத்துகிறது.

67. காது ஒரு வரையறையுள்ள கருவி. அது ஒலிப் பதிவுகளை மனதிற்கு எடுத்துச் செல்கிறது. காதின் செயல்கள் மனச் செயல்களுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

68. காது தன் கேட்கும் ஆற்றலை அதன் மூல முதலாகிய பிரமத்திலிருந்து பெறுகிறது.

69 காது பிரம்மத்தின் ஒளியூட்டும் நுண்மதியால் ஓசை, அல்லது இசை முதலியனபாற் செல்லச் செய்யப்படுகிறது.

70. பிரம்மமே உண்மையான, கேட்காத கேட்போன், அது காதின் செயல்களின் மௌன சாட்சி-

71. எதை முகருஞ் சக்தி அறிகிறதில்லையோ ஆனல்

எது முகருஞ் சக்தியை அதன் விடயங்களுக்குச் செலுத்துகின்றதோ — அதை மாத்திரம் பிரம்மம் என்றறிக.

72. எதை யொருவர் சுவாசத்தால் சுவாசிப்பதில்லையோ ஆனுல் சுவாசம் எதனுல் சுவாசிக்கப் படுகிறதோ — அதை மாத்திரம் பிரம்மமாக அறிக.

73. எது பிராணனுல் உயிர்ப்பூட்டப் படுவதில்லையோ ஆனுல் எது எல்லாப் பிராணிகளையும் உயிர்ப்பூட்டும் ஆற்றலை பிராணனுக்குக் கொடுக்கிறதோ — அதை மாத்திரம் பிரம்மம் என்றறிக.

74. பிரம்மம் ஒரு காட்சிப் பொருளன்று. பிரம்மஞானம் என்பது உள்ளுணர்வான தெரிநிலையே.

75. பிராணன் பிரம்மத்தின் ஒளியூட்டும் நுண்மதியால் அதன் விடயங்களை நோக்கி நகரச் செய்யப்படுகின்றது.

## அதீத உண்மை

76. ரிஷிக்கு விடய — விடயி அறிவில்லை. விடயியும் விடயமும் அவருக்கு ஒரே மாதிரியானவை. அவர் எங்கும் பிரம்மத்தையே காண்கிறுர்.

77. ஒவ்வொருவரின் ஆன்மா பிரம்மமே.

78. பிரம்மம் இன்னென்றின் அறிபொருளாகச் செய்யப்பட முடியாது; ஏனெனின் அதைத் தவிர அறிவு யாதுமில்லை.

79. பிரம்மம் அறியப் பட்டதிலிருந்து வேறுனது. அது அறியப் படாததிலிருந்துங் கூட வேறுனது.

80. சாதனு சதுட்டயம் துணைச் சாதனமாக வுடையவனும் தூய்மையும் நுண்மதியுமுடையவனும் உபநிஷதங்களின் படிப்பினைகளை ஓர்ந்தறிய முடியும்.

81. பிரம்மம் என்றும் மௌன காட்சியாளராயிருக்கும் உள்ளுணர்வே. தன்னறிவே.



82. காண்போன் ஒருகாலும் காணப்பட முடியாது.

83. அறிவோன் ஒருகாலும் நுண்ணறிவால் அறியப் பட முடியாது.

84. புலன்களால் உணர்ந்தறியப்படுவதும் மனதாற் கருதுப் படுவதுமாகிய யாதொன்றும் பிரம்மமாக இருக்க முடியாது.

85. ஓர் உலகப் பொருள் மட்டுமே புலன்களாற் புரிந்து கொள்ளப் படலாம். மனதாற் சிந்திக்கப்படலாம்.

86. பிரம்மம் மனம், நுண்ணறிவு, புலன்களால் அறியப் படாதது.

87. பிரம்மம் சமாதியில் நேர் உள்ளுணர்வுக் காட்சி மூலம், ஆன்மா அல்லது ஆத்மாவாக, ஐயமற அறியப் படுகிறது.

83. ''அனைத்தும் உண்மையிற் பிரம்மமே; ஆன்மாவைத் தவிர யாதுமில்லை'' என்று உணரும் உறுபல உயர் நிர்விகற்ப சமாதி நிலையை நீ யடையும்வரை நீ மேலும் மேலும் விசாரணை, சிந்தனை, தியானம் பயில வேண்டும். எல்லா நாம ரூபங்களிலும் அதன் இருப்பை நீ உணர வேண்டும்.

89. ஒரு விடயத்தை யறிவது போல் நீ பிரம்மத்தை யறிய முடியாது. பிரம்மம் உள்ளுணர்வான அல்லது நேர் அனுபவம் அல்லது ஒளிர்வது மூலம் ஒரு விடயமாக அன்று ஆனுல் தூய தன்னறிவாகவே அறிய அல்லது அடையப்படுகிறது. விடயியும் விடயமும் ஆன்மீக அனுபவத்தில் ஒன்றே.

90. பிரம்மம், சாக்கிர, சொப்பன, சுழுத்தி நிலைகளின் சாட்சியே.

91. பிரம்மம் தன்னியல்பில் நுண்மதியே. அது ஓரின இயல்பான தூய அறிவுப் பிண்டமே.

92. பிரம்மம் பிறப்பிறப்புத் தேய்வின்றிய நித்திய

மான தூய, தட்டுத் தடங்கலற்ற இரண்டற்ற ஒன்றே. அது எல்லாப் பிராணிகளினதும் ஆன்மா அல்லது ஆத்மனே.

93. மனமாற்றங்கள் அனைத்தும் பிரம்மத்தில் ஒன்றுகிய நிர்விகற்ப சமாதியில் சாட்சியில்லை.

94. பிரம்மம் நித்திய, தூய, தற்பிரகாச தேய்வின்றிய பூரண சச்சிதானந்தமே.

95. பிரம்மஞானி அபூர்வ ஆன்மிக ஆற்றலை வைத்திருக்கிறுர்.

96. இவ் ஆத்மன் ஆற்றலற்ற ஒருவரால் அடைய முடியாது.

97. மெய்யாற்றல் ஆன்மீக அறிவு மூலமாகத்தான் விளைகிறது.

98. பிரம்மஞானி முற்றுகப் பயமின்றியவராகிறுர்.

99. இவ் வாத்மன் சேதப்படுமியல்பின்றியதும் வெல்ல முடியாததுமாயிருக்கிறது.

100. வெப்பமே அக்கினியின் உண்மை யியல்பாயிருப்பதுபோல் அழிவின்மையே பிரம்மத்தின் மெய்யியல்பாயிருக்கிறது.

101. கருதவோ அல்லது சொற்களால் விவரிக்கவோ முடியாத நிர்விகற்ப சமாதி ஒரு விழுமிய அறிவுச் சக்தியைத் தூண்டும் அனுபவமே. மனம், நுண்ணறிவு, புலன்களின் தொழிற்பாடு ஓயும்போது நீ அதை நீயாகவே சமாதியில் அனுபவித்தறிய வேண்டும்.

## சமீபத்தில் விடுதலை

102. ஒளி இருளை யழிப்பதுபோல் பிரம்மஞானம் அஞ்ஞானத்தை யழித்து உள்ளார்ந்த அழிவின்றிய இயல்பை வெளிப்படுத்துகிறது.



103. அஞ்ஞானமே மனித துன்பம் அனைத்திற்கும் மூலகாரணம்.

104. ஒருவன் பிரம்மத்தை யறியாதிருந்தால் அவன் பிறப்பிறப்புகளாகிய வட்ட வழியிற் சிக்குகிறுன்.

105. உண்மையாகத் தீவிர நாட்ட முடையவர்கள் ''நான்'', ''எனது'' என்னும் திரிபுச் சிந்தையைத் துறந்து உலக வாழ்விலிருந்து அருவருப்புடன் விலகுகிறுர்கள். ஏனெனின் இங்கு அனைத்தும் அழியுமியல்புள்ளதும் கண்மாயமானதும் கணபங்கமானதுமாயிருக்கிறது.

106. அவர்கள் ஆத்மனைத் தியானித்து எல்லாப் பொருட்களிலும் ஆத்மனின் ஒரே யுள்ளுறையுந் தன்மையைக் காண்கிறுர்கள். அவர்கள் அனைத்திலும் ஆன்மவொருமையை அல்லது ஆத்மனின் ஒன்றுந் தன்மையை அறிந்து அழிவின்றியவர்களாகிறுர்கள். அவர்கள் பிரம்மமாகிறுர்கள்.

107. உறுபல உயர் பிரம்மத்தை யறிபவன் பிரம்மமே யாகிறுன்.

108. பிரம்மத்தில் வாழ்பவன், ஆத்மனை எய்தப்பெற்றிலன், மெய்யாக மெய்வாழ்வு நடத்துகிறுன்.

109. உலகியல் வாழ்வு அல்லது புலன் வாழ்வு பொய்யானதே.

110. பிரம்மஞானி சீவிக்கும் போதே விடுதலை (ஜீவன்முக்தி) பெறுகிறுன்.

111. பந்தத்திற்குக் காரணமாகிய அஞ்ஞானம் பிரம்மஞானத்தால் அகற்றப்பட்டதும் ஒருவன் உடனடியாக விடுதலை பெறுகிறுன்.

## யக்ஷ - உபக்யான நீதி

112. நன்னுட்டங்களுக்கும் தீய நாட்டங்களுக் மிடையில், சத்துவம், இராஜசம், தாமசங்களுக் கிடையில், எளிய அசுத்த மனதுக்கும் உன்னத சுத்த மனதுக்கு மிடையில் உண்மைப் போர் உள்ளே உண்டு.

113. புலன்களும் மனமும் பிராணனும் சச்சரவு செய்யத் தொடங்குகின்றன; 'யாம் இவ்வுடலை ஒருமித்து நிலை நிறுத்தி ஆதரிக்கிறோம்'. பிராணன் வெற்றியடைகிறது.

114. பிராணன் கூட உயிர்ப்பற்றது. இப் பிராணனுடைய பிறப்பிடமும் பிரம்மமே. புலன்களும் மனமும் பிரா

ணனும் அவற்றின் ஒளியையும் ஆற்றலையும் பிரமத்திடமிருந்து மட்டும் பெறுகின்றன.

115. உபநிஷத் என்பது பிரம்மஞானம் அல்லது இரகசியக் கோட்பாடு என்று பொருள்படுகிறது. அறிவுறுத்தல்கள் வேண்டி சிஷ்யர்கள் பற்றுறுதியுடன் ஆசிரியரைச் சூழ்ந்திருக்கிறார்கள். 'உப' - அருகில், 'நி' விருப்பத்துடன், – 'ஷத்' இருக்கிறார்கள். உபநிஷத் என்பது பிரம்மத்தைப் பற்றி எடுத்துரைக்கும் மூலபாடம் என்றும் பொருள்படுகிறது.

116. தவம், தன்னடக்கம், தன் மறுப்பு முதலியன பிரம்மஞானம் பெறுவதற்குத் துணைகளே.

117. ஞானம் தீவினைகளின் அழிவால் மனிதரில் உதயமாகிறது.

118. பிரம்மஞானம் இப் பிறப்பிலேயோ அல்லது பல முற் பிறப்புகளிலேயோ தவம், தன்னடக்கம், நற்கர்மங்களால் தங்கள் மங்களைப் புனிதப் படுத்தியவர்களில் உதிக்கிறது.

119. மனமாசுக்களை யகற்றுதவர்கள் பிரம்மத்தை விளக்கும்பொழுது விரோசனனின் சம்பவம் போன்று விசுவசியாதிருக்கிறார்கள்.

120. யாரது இறைபக்தி பேரளவானதோ, யாரது குருபக்தி இறைபக்தியைப் போன்று பேரளவானதோ, அம்மேன்மையான ஆன்மாவிற்கு இவ்விரகசியங்களை விளக்கப்படும்போது தெளிவாகின்றன.

121. பிரம்மஞானம் தன்னடக்க முடையவர்களும் தவமியற்று கிறவர்களுமாகிய மனிதர்களிடம் மட்டும் ஒரு நிலையான ஆதாரம் பெறுகிறது.

122. உண்மையே பிரம்ம வித்தையின் அல்லது ஆன்மீக அறிவின் இருப்பிடம். தவமும் தன்னடக்கமும் அதன் ஆதாரமே.

123. உண்மை என்பது ஏமாற்றத்திலிருந்து, வாக்கு, மனம் அல்லது செயல் வஞ்சனையிலிருந்து சுவாதீனமே.

124. பிரம்மஞானம் பேச்சு, மனம், செயல்களில் இறுமாப்பும் வஞ்சனையுமின்றியவனும் நல்லியல்புடையவனும் ஆகிய ஒரு மனிதனில் மட்டும் உதிக்கும்.

125. பிரம்மஞானம் ஏமாறச் செய்கிறவரும் பொய்மை கூறுபவருமாகிய ஒரு மனிதனிடம் உதிப்பதில்லை. ஆகையால் உண்மையே ஞானத்தின் இருப்பிடம் அல்லது தங்குமிடம் என்று சொல்லப்படுகிறது.

126. உண்மை ஒரு ஞான உதவியாக மற்றெல்லாவற்றையும் மேம்படுகிறது.

முற்றும்,

# திருக்கோணமலைத்

## திருக்கோணேஸ்வரஆலயத்தின் மகா கும்பாபிஷேகம்

மேற்படி மகா கும்பாபிஷேகம் 1963 ஏப்ரில் 3ந் திகதி நடைபெற இருக்கிறது. குறைக் கட்டிடம் முடிப்பதற்கு பத்தாயிரம் ரூபா வரையும் கும்பாபிஷேகத்திற்கு இருபதினாயிரம் ரூபா வரையும் தேவைப்படுகின்றது. பாடல் பெற்றஇத் திருத்தலத்தின்

## புனருத்தாரணத்திற்காக

அன்பர்கள் யாவரிடமும் பண உதவியை எதிர்பார்க்கிறோம். எந்த ஒரு சிறு உதவியும் ஏற்றுக் கொள்ளப் பெறும். இப் பணிக்கு அனுப்பப்படும் நன்கொடைகள் யாவும் ஏற்றுக்கொண்டு பற்றுச் சீட்டுக் கொடுப்பவர்

திரு. சி. ஆறுமுகநாதன்
தபால் பெட்டி இல. 9,
திருக்கோணமலை.

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| தெய்வீக வாழ்க்கைச் சங்க மலர் | | 1–25 |
| வழிபாடு | | –25 |
| திருமுறைக்காட்சி | (நா. முத்தையா) | 1–50 |
| கேதார் பத்திரி யாத்திரை | ,, | –75 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்ச தாசன்) | –50 |
| அறிவுரைக் கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | –65 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | 2–25 |
| நவராத்திரிப் பாடல் | | –25 |
| ஆத்ம நாதம் | (சுத்தானந்த பாரதியார்) | 3–00 |
| கீதாயோகம் | ,, | 2–50 |
| கந்தரநுபூதி – பொழிப்புரையுடன் | | –25 |
| மார்கழிப் பாடல் | | –20 |

## சந்தா நேயர்களுக்கு.

அன்புடையீர்

இன்றுவரை 15ம் ஆண்டுக்குரிய சந்தா அனுப்பியவர்களுக்கு உடனுக்குடனேயே ரசீது அனுப்பியுள்ளோம். அவர்களுக்கெல்லாம் எமது நன்றி உரித்தாகுக. இன்று வரை சந்தா அனுப்பாதோர் உடனே அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.

(சிலோன்.) போன்;– 353.

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், அரிசிப்பாளையம், சேலம்–2. என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்து, அதை எமக்கும் தெரியப்படுத்த வேண்டுகின்றோம்.

## வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கைகால்அசதி பிடிப்பு பசியின்மை, வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்

[பத்தியமில்லை]

சம்பு இன்டஸ்ரீஸ் – அரிசிப் பாளையம்சேலம் 2 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி.

Printed & Published by Mr. N. Muthiah, Athmajothi Nilayam, N'pitiya. at Athmajothi Press, Nawalapitiya. (Ceylon) 13-2-63.